நாற்பேருண்மைகளை உய்த்துணர்ந்து கொள்வதற்கான தர்ம போதனைகள்...

# உண்மையான மனைவி

# யார்?

அதி வணக்கத்திற்குரிய கிரிபத்கொடை ஞானானந்த தேரர் அவர்கள்

**உண்மையான மனைவி யார்?**

முதலாம் பதிப்பு 2014 வருடம் புரட்டாதி மாதம்.
இரண்டாம் பதிப்பு 2015 வருடம் மாசி மாதம்.
மூன்றாம் பதிப்பு 2015 வருடம் மார்கழி மாதம்.
நான்காம் பதிப்பு 2017 ஆனி மாதம்

நூலாசிரியர் :
அதி வணக்கத்திற்குரிய கிரிபத்கொடை ஞானானந்த தேரர்.

மொழிபெயர்ப்பு :
திருமதி. லக்மினி ராதிகா ஸ்ரீகாந்தன்.

செவ்வை வாசிப்பு :
திரு. ஸ்ரீகாந்தன்
(துணை ஆசிரியர், லேக் ஹவுஸ் நிறுவனம்)

வெளியீடு : மஹாமேக வெளியீட்டாளர்கள்.
வடுவாவ,
யடிகல்ஒலுவ,
பொல்கஹவெல

## பூஜைக்குரிய கிரிபத்கொடை ஞானானந்த தேரர்

சகோதர சிங்கள பௌத்தர்களுக்காக நிகழ்த்திய தர்ம போதனைகளிலிருந்து தெரிவு செய்யப்பட்டு தமிழுக்கு மொழிபெயர்க்கப்பட்டனவாகும்.

# உள்ளடக்கம்.


| | | |
|---|---|---|
| 01. | சப்த பார்யா சூத்திரம் | 07 |
| | (அங்குத்தர நிக்காயம்) | |
| 02. | கோதன சூத்திரம் | 43 |
| | (அங்குத்தர நிக்காயம்) | |
| 03. | அருஞ்சொற்கள் | 77 |

**தம்மோ ஹவே ரக்கதி தம்மசாரிங்**
**சத்தங் மஹன்தங் யதா வஸ்ஸகாலே**
**ஏசானிசங்சோ தம்மே சுசிண்ணே**
**ந துக்கதிங் கச்சதி தம்மசாரீ தீ**

பெரிய மழையின் போது, உறுதியான குடையை ஏந்திக்கொண்டிருக்கும் ஒருவரை அந்த குடை எவ்வாறு நனையவிடாமல் பாதுகாக்கிறதோ அதேபோல் தர்மத்தில் ஈடுபடுபவரை கண்டிப்பாக தர்மம் பாதுகாக்கும். தர்மத்தினை முறையாக பின்பற்றுபவர் நால்வகை நரகங்களில் பிறக்கமாட்டார். இதுவே நன்கு பழக்கப்படுத்திய தர்மத்தின் உன்னத விளைவாகும்.

(தேர தேரி காதை

*நமோ தஸ்ஸ பகவதோ அரஹதோ சம்மாசம்புத்தஸ்ஸ*

அந்த பாக்கியமுள்ள அரஹத்* சம்மாசம்புத்த** பகவானுக்கு எனது நமஸ்காரமாகட்டும்!

# 01

# சப்த பார்யா சூத்திரம்.

மனிதர்களாக வாழும் எல்லோருக்கும் இவ்வாழ்வினை உய்த்துணரும் பாக்கியம் கிடைப்பதில்லை. புத்தபகவானின் தர்மத்தினை செவிமடுத்த, சிந்திக்கும் திறனுடைய ஒருவருக்கே இந்த பாக்கியம் கிடைக்கிறது. புத்தபகவானின் தர்மம் கிடைக்காவிடின் சிந்திக்கும் ஆற்றல் இருந்தாலும் அதிலிருந்து தம் வாழ்விற்கு பிரயோசனமானதை தேர்ந்தெடுக்க முடியாது. சிந்திக்கும் ஆற்றல் இருக்கும் ஒருவரிடம் புத்தபகவானின் தர்மம் கிடைப்பது என்பது உலகின் மிக அரியதொரு விடயமாகும். புத்தபகவானின் தர்மத்தை செவிமடுக்க கிடைப்பது நல்வழிகாட்டும் சத்புருஷர்கள் மூலமே. நல்வழிகாட்டும் சத்புருடர்கள் இல்லாவிடில் இந்த தர்மத்தை எம்மால் அறிந்து கொள்ள முடியாது. இந்த உன்னதமான தர்மம் எமக்கு கிடைக்காவிடில் பிறப்பு இறப்புக்களுக்கு அடிமையாகி

---

* கிலேசங்களற்ற (மனமாசுகளற்ற)

** உன்னத சத்தியங்களை சுயமாக உய்த்தறிந்தவர்.

சம்சார பயணத்தில் தொடர்ந்தும் பயணிக்க வேண்டிய துர்ப்பாக்கியமே கிட்டும்.

## கைவிட்டுப்போன அதிஷ்டம்.

தர்மத்தை உய்த்துணர்ந்துக் கொள்ள கிடைத்திருக்கும் இந்த அரிதான சந்தர்ப்பத்தை நாம் தவறவிட்டால் நாம் எவ் உலகில் பிறந்து எவ்வகையான துன்பத்தை அனுபவிப்போம் என யாராலும் சொல்ல முடியாது. புண்ணியவான்களே! சிந்திக்கும் ஆற்றல் எம் வாழ்க்கையில் எப்போதும், நிலைத்திருக்கும் ஒன்றல்ல.

ஒரு நாள் வயது முதிர்ந்த ஒரு தம்பதியினர் ஒரு சிரட்டையை கையில் ஏந்தியவாறு யாசகத்தில் செல்கின்றனர். புத்தபகவான் இதனை கண்ணுற்று புன்முறுவல் பூத்தார். அப்போது ஆனந்த தேரர் "புத்தபகவானே, அந்த யாசகர்களை பார்த்து புன்முறுவல் பூத்ததன் காரணம் என்ன?" என்று வினவினார். புத்தபகவான் மொழிந்தார், "புண்ணியமிகு ஆனந்த, இவ் இருவரும்தான் இந்த நகரில் வாழ்ந்த பெரும் சீமானும் சீமாட்டியும், இவ்விருவரும் இளமை பருவத்திலே புத்த சாசனத்தில் நுழைந்திருப்பின் அரஹத்* நிலையை அடைந்திருப்பர். அவ்வாறில்லாது இடைப்பட்ட பருவத்தில் இந்த புத்த சாசனத்தில் சரணடைந்திருப்பின் ஏனைய வீடுபேற்று** நிலைகளையோ உறுதி செய்திருப்பார்கள். இப்போது அவ்வனைத்தையும் இழந்து விட்டனர்." என்று.

## அனைவருக்கும் பாதுகாப்பு தர்மம் மாத்திரமே!

தர்மத்தினை உய்த்துணர்ந்துக் கொள்ளும் திறனுடையவராக ஒருவர் மனித குலத்திலே பிறக்கிறார். ஆனாலும்

*. ஆசை, கோபம், அறியாமை எனும் மூன்று மனமாசுகளையும் அழித்தவர். மேலும் பிறவாதவர். மோட்சத்தை உறுதிசெய்த நிலை

**இது நால்வகையாகும். அதனை இந்நூலின் இறுதி பக்கத்தில் விரிவாக அறிந்து கொள்ளலாம்.

தனக்குள் அவ்வாறு ஒரு திறமை உண்டு என அறிந்து கொள்ளாவிட்டால், அதேபோல் தர்மத்தினை நோக்கி வராவிட்டால் பலனில்லாத விடயங்களுள் உழன்று அந்த பெரும் வாய்ப்பினை இழந்து விடுகிறார். 'க்ஷண சம்பத்தியம்' அற்று போதல் எனக்கூறுவது இதற்கு தான். எனவேதான் இந்த உன்னதமான வாய்ப்பினை இழந்து விடாமல் தர்மத்தினை நோக்கியே செல்ல வேண்டும். இந்த தர்மத்தினை உய்த்துணர வேண்டும் என்ற எண்ணம் எம்முள் இருக்க வேண்டும். இந்த எண்ணம் எம்முள் இருந்தால் புத்த சாசனமும் மனித வாழ்வும் கிடைத்த இந்த அரிதான சந்தர்ப்பத்தின் மூலம் சிறந்த பயனை பெறலாம்.

## மனைவிமாரது விபரங்கள்

இன்று நாம் பார்க்கப்போவது புத்தபகவானால் போதிக்கப்பட்ட மிகவும் உன்னதமான போதனை ஒன்றையே. இந்த போதனை ஏனைய போதனைகளை விட சற்று வித்தியாசமானதாகும். இந்த போதனையில் சதுர் ஆர்ய சத்தியத்தை (நாற்பேருண்மைகளை)* முதன்மை படுத்தி கூறாமையே அதற்கு காரணமாகும். ஆனால் அனைத்து புத்த போதனைகளிலும் இருக்கும் பொதுவான இலட்சணங்கள் இந்த போதனையிலும் உள்ளடங்கி இருக்கின்றன. அவைதான் இவ்வாழ்வை சுமுகமாக்குதல் மற்றும் மறுவாழ்வில் சுவர்க்கத்தை அடைய நெறிப்படுத்தல் என்பனவாகும். இந்த போதனையானது எம் வாழ்விற்கு மிகவும் முக்கியமானதொன்றாகும். இந்த போதனையின் பெயர் 'சப்த பார்யா சூத்திரம்' அதாவது ஏழு வகையான மனைவியரை பற்றி கூறப்பட்ட போதனையாகும். இந்த

---

* துக்கம், துக்கத்திற்கான காரணம், துக்க நிவாரணம், துக்க நிவாரண மார்க்கம்.

போதனை அங்குத்தர நிக்காயம் எனும் புனித நூலின் ஏழாவது பகுதியில் அடங்கியுள்ளது.

**சண்டை பிடிக்கும் மருமகள்.**

அந்த நாட்களில் சாவத்திய நகரின் ஜேத்தவனராமத்தில் புத்தபகவான் வசித்திருந்தார். அன்று புத்தபகவான் தனது உணவு பாத்திரத்தை கையில் ஏந்தியபடி அனேபிண்டு எனும் செல்வந்தரின் வீட்டிற்கு வருகை தந்து பூஜிக்கப்பட்ட ஆசனத்திலே அமர்ந்திருந்தார்.

அச்சமயம் வீட்டின் பிற்புறத்திலிருந்து பெரும் சண்டை சச்சரவுகளின் சப்தம் கேட்கிறது. அப்போது புத்தபகவான் அனேபிண்டு சீமானிடம், “புண்ணியமிகு இல்லத்தலைவரே, வீட்டின் பிற்புறத்தே நடக்கும் சச்சரவு என்ன? மீன்களுக்காக சண்டையிடும் காக்கைகளை போல் அங்கே கூச்சலிடுவது யார்?” என வினவினார். அதற்கு அனேபிண்டு சீமான் “பாக்கியமுள்ள பகவானே! அங்கே சண்டையிடுவது எனது மருமகள். பணக்கார குடும்பத்திலிருந்து நாம் ஒரு மருமகளை கொண்டு வந்தோம். அவள் மாமனாரை மதிப்பதுவுமில்லை, மாமியாரை மதிப்பதுவுமில்லை, கணவனுக்கோ, விருந்தினருக்கோ பணிவிடை செய்வதுமில்லை. புத்தபகவானே! தங்களையும் அவள் மதிப்பதில்லை. அவளின் பெயர்தான் சுஜாதா” எனக்கூறலானார். அந்த சமயம் புத்தபகவான் சுஜாதாவை அழைக்க அவளும் வந்து புத்தபகவானை வணங்கி ஒரு புறத்தில் அமர்ந்தாள்.

**ஏழுவகை மனைவியர்**

புத்தபகவான் சுஜாதவிடம் கூறுகிறார். “புண்ணியமிகு

சுஜாதா! இந்த உலகில் ஏழு வகையான மனைவியர் உள்ளனர். அவர்கள் தான்

1. (வதக்க பார்யா) கொடூர மனைவி
2. (சோரி பார்யா) திருட்டு குணமுள்ள மனைவி
3. (ஆர்யா பார்யா) எஜமானி போன்ற மனைவி
4. (மாத்ரு பார்யா) தாயை போன்ற மனைவி
5. (பகினி பார்யா) சகோதரியை போன்ற மனைவி
6. (சக்கீ பார்யா) தோழியை போன்ற மனைவி
7. (தாசீ பார்யா) பணிப்பெண்ணை போன்ற மனைவி

புத்தபகவான் சுஜாதாவிடம், புண்ணியமிகு சுஜாதா இந்த மனைவிமார்களுள் நீ எந்த வகையில் அடங்குகிறாய்?" என வினவினார். அதற்கு சுஜாதா "பாக்கியமுள்ள பகவானே! தாங்கள் சுருக்கமாக உரைத்த விடயத்தை பற்றி நான் விரிவாக எதனையும் அறியேன். எனவே சுருங்க கூறிய இவ்விடயத்தை சற்று விரிவாக எனக்கு உபதேசிப்பீராக!" எனக்கூறினாள். அப்போது தான் புத்தபகவான் இந்த போதனையை மொழிகிறார்.

### ஏன் மனைவிக்கு மாத்திரமா, எமக்கு இல்லையா?

பாருங்கள், இந்த போதனையை புத்தபகவான் சுஜாதாவின் சச்சரவை முன்னிட்டே போதித்தார். இந்த போதனையை பற்றி நான் போதனைகள் நடாத்திய பின் சிலர் என்னிடம் வந்து "ஏன் மனைவியரை பற்றி மாத்திரம் உபதேசித்தீர்கள்? கணவன்மார்கள்

தொடர்பில் அவ்வாறான உபதேசங்கள் இல்லையா?" என கேட்பார்கள். புத்தபகவான் பிரசன்னமான சந்தர்ப்பங்களில் கணவன்மார்கள் சச்சரவுகளை ஏற்படுத்தியிருந்தால் அவர்களுக்கும் நன்றாக கேட்க கிடைத்திருக்கும். கணவர்மாரது துரதிஷ்டம் தான் அப்படி ஒரு சந்தர்ப்பம் அமையவில்லை.

## இப்படி ஒரு மனைவி கிடைத்தால் அழிவு தான்

புத்தபகவான், "அவ்வாறாயின் சுஜாதா நன்றாக கேட்டுக்கொள்வாயாக!" என போதனை செய்யத்துவங்கினார்.

## கொடூர மனைவி

முதலாவது மனைவிதான் கொடூர மனைவி. புத்தபகவான் அதனை பின்வருமாறு விபரிக்கிறார். **(பதுட்டசித்தா)** இந்த கொடூர மனைவி, எப்போதும் தன் கணவன் பற்றிய கொடூர சிந்தனையுடன் இருப்பாள். **(அஹிதானுகம்பினி)** கணவனுக்கு உதவ வேண்டும் எனும் எண்ணம் சிறிதளவேனும் இல்லை. ஏதேனும் தீங்கு செய்வதே ஒரே நோக்கமாக இருக்கும்.**(அஞ்ஞேசு ரத்தா)** வேறு ஆண்களை பற்றி சதா எண்ணிக்கொண்டிருப்பாள். **(அதிமஞ்ஞதே பதிங்)** தனது கணவனை மீறி வேறு ஆண்களோடு உறவு வைத்து கொள்வாள். **(தனேன கீதஸ்ஸ வதாய உஸ்சுகா)** தனது கணவன் உழைக்கும் பணத்தை வீணாக்கியபடி, கணவனை இம்சித்து குறை கூறுவாள். இவளை தான் **(வதக பார்யா)** கொடூர மனைவி என புத்தபகவான் மொழிந்தார்.

பார்வைக்கு இவர்கள் நல்லவர்களாக தென்பட்டாலும், இவ்வாறானவர்கள் உலகத்தில் நிறையவே இருக்கிறார்கள்.

மாங்கன்றுகள் சிலவற்றை வரிசையாக ஒன்றாக நாம் நட்டுவிட்டால் சிறுவயதில் இம்மரங்களின் மாற்றங்கள் தெரியாது. ஒரே விதமாக இம்மாமரங்கள் பலன் தரும் என்றே நினைப்போம். ஆயினும் சிலகாலம் சென்று அவை வளர்ந்து பலன்தர ஆரம்பிக்கும் போதுதான், இது பெட்டிமாங்காய், இது கருத்த கொழும்பான், இது கிளிமூக்கு என்று வேறுபாடுகளை அறிய முடிகிறது. அது போலத்தான் ஆரம்பத்தில் எவரையும் சரியாக அறிய முடிவதில்லை. திருமணம் ஆகி சிலகாலம் கடந்த பின்பு தான் இந்த இலட்சணங்கள் தோன்ற ஆரம்பிக்கின்றன. இவ்வாறானவள் தனது கணவனை இம்சித்து, வஞ்சித்து இறுதியில் துன்பமிகுந்த நரகத்திலே பிறக்கிறாள்.

**காதலிக்கும் போது எருமை, கழுதை, மாடு என்று சொல்லவில்லை.**

யாருக்கேனும் இவ்வாறான கொடூர மனைவி கிடைத்தால் அந்த கணவன் இது என் தலைவிதிதான் என மனதை தேற்றிக்கொள்ள வேண்டியதுதான். குடும்பத்தில் எவ்வித சந்தோஷமுமின்றி மரணிக்கும் வரை துன்பத்துடனேயே தான் வாழ வேண்டும். இதனை சொல்லும் போது எனக்கு ஒரு விடயம் ஞாபகத்திற்கு வருகிறது. ஒரு நாள் என்னிடம் ஒருவர் வந்து “சுவாமியே! எனக்கு இந்த குடும்ப வாழ்க்கையே வெறுத்து விட்டது. ஒரு மிருகமாக கருதியே என் மனைவி என்னை ஏசுகிறாள்.” என்று கூறினார். நான் அவரிடம் உங்களை எவ்வாறு அழைக்கிறாள்? என்று கேட்டேன். “இங்கே வா மாடு, எருமை, கழுதை” என்று பல மிருகங்களின் பெயரை சொல்லிக்கொண்டு போனார். இறுதியில் நான் அவரிடம். “ஐயா இதுவென்றால் உங்களுடைய தலைவிதிதான்.

பகைமையை ஏற்படுத்திக்கொள்ளாமல் மைத்ரீ குணத்தோடு (பரந்தளவிலாக அன்பினை பரப்பிக்கொண்டு) இருங்கள்" என கூறினேன்.

**மகளே! இங்கே பார் நான் எப்படி வாழ்கிறேன் என்று.**

தன் கணவனை அடக்கி மிதித்து கொண்டிருக்க வேண்டும் என நினைப்பதாலேயே இவ்வாறு நடக்கிறது. இவ்வாறான கொடூர மனைவிகளுக்கு பெண் குழந்தைகள் பிறந்து விட்டால் அந்த குழந்தைகளுக்கும் அழிவுதான். ஏனெனில் தன் பிள்ளைகளிடம் "இங்கே பார் மகளே! நான் எப்படி உன் அப்பாவை அடக்கி வைத்துள்ளேன் என்று. நீயும் உன் புருஷனை அடக்கி வைத்திரு. அவனுக்கு தேவையான முறையில் ஆடாதே!" என அறிவுரை கூறுவாள். பின்னர் அந்த பிள்ளைகளும் ஓர் நாள் திருமணம் முடித்து குடும்ப வாழ்வை தொடங்கும் போது தனது தாயை போலவே வாழ்வதற்கு முற்படுவர். அம்மா அப்படி செய்தாலும் நான் அப்படிச்செய்ய மாட்டேன் என்று நினைக்கும் புண்ணியமுள்ள ஒரு பெண்ணாலேயே இதிலிருந்து மீள முடியும்.

பாருங்கள், இவ்வாறான கொடிய மனைவியாவதால் எத்தனை பேருக்கு துன்பம் என்று. எவரேனும் ஒருவர் கொடூர மனைவியாக வாழ்ந்து அதனிலிருந்து மீளாமலே மரணிப்பாராயின் அவர் மரணித்த பின் துன்பம் மிகுந்த நரகத்திலே பிறவியெடுப்பார் என புத்தபகவான் மொழிந்துள்ளார். கொடூர மனைவியாக வாழ்பவள் இவ்வாழ்வினையும் மறுவாழ்வினையும் சுமுகமாக்கி கொள்ள தவறிவிடுகிறாள். இவ்வாறு வாழும் ஒரு பெண்ணிடம் தர்மம் நிலைத்திருக்காது.

## வீட்டினுள் வாழும் திருடிகள்

அடுத்த மனைவிதான் “சோரி பார்யாவ” அதாவது திருட்டு குணம் கொண்ட மனைவி. புத்தபகவான் இவ்வாறு விபரிக்கிறார். **(யங் இத்தியா விந்ததி சாமிகோ தனங்)** திருட்டு குணம் கொண்ட மனைவி தன் கணவன் உழைக்கும் பணத்தினை திருடுவாள். தனது கணவன் மிகவும் முயற்சியோடு தொழிற்கலைகளை கற்று கஷ்டப்பட்டு உழைத்து கொண்டு வரும் பணம் இவளுக்கு போதாது. இவள் கணவனின் பணத்தின் ஒரு பகுதியை திருடி அதனை தனக்கு தேவையான முறைகளில் செலவு செய்வாள். அதுமட்டுமல்லாது இறுதியில் தன் கணவனையே “நீ உழைப்பது திரும்ப கூட போதாது” என சண்டை போடுவாள். தனது கணவனை இம்சிப்பாள். **(அப்பம்பி தஸ்மா அபஹாது மிச்சதி)** எவ்வளவுதான் பணமிருந்தாலும் அதனை சிக்கனமின்றி ஊதாரித்தனமாக செலவு செய்வாள். அதேபோல் பணத்தினை திருடி அனாவசியமான முறையில் செலவு செய்து அது தொடர்பாக கணவன் கேட்கும் போது இல்லாத பொல்லாத விடயங்களை கூறி கணவனோடு சண்டை போடுவாள்.

சற்று சிந்தித்து பாருங்கள், கணவன் உழைக்கும் பணத்தை மனைவியே திருடுவது என்றால் அது ஒரு மிகம்பெரும் பாவமாகும். அதுமட்டுமல்ல தாய் செய்யும் இந்த செயலை காணும் பிள்ளைகளுக்கும் இது பழகிவிடும். அந்த பிள்ளைகள் நிதமும் தன் தாய் திருடுவதையும் ஊதாரித்தனமாக செலவு செய்வதையுமே காண்பதால் பிள்ளைகளும் அதனையே பின்பற்றுவர்.

## தர்மத்தை பின்பற்றுவதே பாதுகாப்பு.

அதேபோல இந்த திருட்டுக்களை பார்க்கும் பிள்ளைகள் தனது தாயிடம் திருடுவதற்கு பழகிவிடுவர். அப்படியில்லையேல் தாயை மிரட்டி பணத்தை பறிக்கவும் முற்படுவார்கள். எமக்கு தெரியும் அப்படிப்பட்ட பல பிள்ளைகள் இருக்கின்றனர். தனது தாயை மிரட்டி பணம் கேட்டு அவள் கொடுக்காத சந்தர்ப்பங்களில் "அம்மா நீங்கள் அப்பாவிடமிருந்து இவ்வளவு பணம் திருடியிருக்கீங்க. நீங்க இப்ப காசு கொடுக்கவில்லை என்றால் அதனை அப்பாவிடம் சொல்லுவேன்" என மிரட்டும் போது அந்த தாய் பயந்து உடனே பணத்தை கொடுக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. எனவே பிள்ளைகளும் வீணாகிவிடுகின்றனர். இதனால் முழுக்குடும்பமே அழிந்து விடுகின்றது. யாரேனும் ஒருவருக்கு இம்மாதிரியான ஒரு மனைவி கிடைத்தால் அது அவருடைய துரதிஷ்டம்தான். திருட்டு குணமுள்ள மனைவி தர்மத்தினை பின்பற்றுவதனாலேயே அதனிலிருந்து மீள முடியும்.

## தர்மத்தின் முன்னால் ஜொலிப்பது குணநலன்கள் மாத்திரமே!

எவ்வளவு கவனமாக ஜாதகப்பொருத்தம் பார்த்து, திருமண மேடை அமைத்து சுபவேளை பார்த்து தாலியை கட்டினாலும் மனைவியானவள் கொடியவளாயின் அந்த திருமணம் சிறப்பாகாது. அப்படியென்றால் எமக்கு தெளிவாக விளங்கும் ஒன்றுதான் திருமண மேடையிலோ அல்லது ஜாதகத்திலோ பிரச்சினை இல்லை. இந்த மனிதர்களின் வாழ்வில் தர்மம் இல்லாமையே பிரச்சினையாகும். பாருங்கள், புத்தபகவானின் தர்மத்தின் முன்னே ஏனையவை எவ்வித பயனுமற்ற போலியானவை ஆகிவிடுகின்றன

அல்லவா? புத்தபகவானது தர்மத்தின் முன் பிரகாசிப்பது குணநலன்கள் மாத்திரமே. புத்தபகவான் “**(சோரி)** திருட்டு குணம் கொண்ட மனைவியானவள் திருந்தி தர்மத்தின் படி தம் வாழ்வினை நடத்தா விட்டால் மரணத்தின் பின் நரகத்திலே பிறப்பாள்” என மொழிந்தார்.

### எஜமானி அம்மாவும் நரகத்திற்குதான்

புத்தபகவான் மொழிந்த அடுத்த மனைவிதான் “ஆர்யா பாரி” அதாவது “எஜமானி போன்ற மனைவி”. அவளை புத்தபகவான் இவ்வாறு விபரிக்கிறார். அவள் **(அகம்மகாமா)** வீட்டில் எந்த வேலையும் செய்ய மாட்டாள். தனது கணவனுக்கு உதவமாட்டாள். பிள்ளைகளை கவனிக்கவும் மாட்டாள். எவ்வித வேலையும் செய்யாமல் அந்த வேலைகளை ஒவ்வொருவர் மூலம் செய்வித்து கொண்டு ஓய்வோடு இருப்பாள். **(அலசா)** இவள் மிகுந்த சோம்பல் குணம் கொண்டவள். **(மஹுக்கஸா)** எந்நேரமும் எதையாவது வயிறு நிறைய சாப்பிட்டுக்கொண்டே இருப்பாள்.

அதுமட்டுமல்லாது புத்தபகவான் மேலும் இவ்வாறு விபரிக்கிறார். இந்த எஜமானி போன்ற மனைவி **(பருஸா)** மிகவும் கொடூரமானவள். தனது கணவனை தகாத கொடிய வார்த்தைகளால் திட்டுவாள். வீட்டிற்கு உறவினரோ நண்பர்களோ வந்தால் முகத்திற்கே ஏசிவிடுவாள். எவருடைய நன்மையையும் கூற மாட்டாள், நினைக்கவும் மாட்டாள். **(சண்டீ ச துருத்தவாதினீ)** எந்நேரமும் கொடிய வார்த்தைகளை உபயோகித்து கொண்டு அகந்தையினால் ஏனையோரை அடக்கிக்கொண்டிருப்பாள். **(உட்டானகானங் அபிபுய்ஹ வத்ததி)** கணவன் உழைத்து கொண்டுவரும் அனைத்தினையும் தனது கட்டுபாட்டுக்குள் வைத்திருப்பாள்.

தனது மூர்க்கத்தனத்தினாலும் அகந்தையினாலும் ஏனையோரை படாதபாடு படுத்துவாள். எல்லாவற்றையும் தன் கட்டுப்பாட்டினுள் வைத்திருப்பாளே தவிர அவை தொடர்பாக தேடி பார்ப்பது இல்லை. பல்வேறு வகையான உணவு வகைகளை சாப்பிட்டு கொண்டு, ஏனையோரை தூ-ற்றிக்கொண்டு சோம்பலுடன் காலம் தள்ளுவாள். இந்த வகையான மனைவியர் ஏராளம் பேர் எம்மை சுற்றியே உள்ளனர். இந்த மனைவி இறந்த பின்னும் நரகத்திலே பிறவி எடுக்க நேரிடும் என புத்தபகவான் மொழிந்தார். இதுவரை நாம் மூன்று வகையான மனைவியரை பார்த்தோம். இந்த மூன்று வகையான மனைவியரது வாழ்வும் தோல்வியிலே முடியும். நரகத்திலே மறுபிறவி கிடைக்கும். இவர்கள் மரணத்தின் பின் நரகத்தில் பிறவாதிருக்க வேண்டுமானால் அவர்கள் தர்மத்தின் வழி தமது வாழ்வினை நடத்த வேண்டும்.

**மகளிர் பத்திரிக்கைகளில் வெளியிடப்படாதவை.**

எமது நாட்டில் பெண்மணிகள் நலனுக்காக தொலைக்காட்சியிலும் ஒலிபரப்பு சேவைகளிலும் எத்தனை நிகழ்ச்சிகள் இடம்பெறுகின்றன. இவை எவற்றிலாவது நாம் இங்கு குறிப்பிடப்படும் மனைவியர் தொடர்பாக பேசப்பட்டுள்ளதா? இல்லை. அதேபோல் பெண்களுக்கான எத்தனையோ பத்திரிக்கைகள் எம் நாட்டில் உள்ளன. இந்த பத்திரிக்கை ஒன்றிலாவது இத்தகைய விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளதா? இல்லை. இவற்றில் பிரசுரிக்கப்படுபவை பயனற்ற வெகுளித்தனமான விடயங்களே. இந்த பத்திரிக்கைகளை வாசிப்பதால் வாழ்வு தொடர்பான எவ்வித தெளிவையும் பெற முடியாது.

## நான் நல்ல மனைவியாவேன்

புத்தபகவானது தர்மம் தொடர்பாக அறிந்திராத காரணத்தினால் கொடூர மனைவியான ஒரு பெண்ணுக்கு இந்த தர்மத்தினை கேட்கும் சந்தர்ப்பம் ஏற்படுகிறது என நினைப்போம். அவள் அதன் பின்னர் "நான் எவ்வாறாவது நல்ல மனைவியாக மாற வேண்டும்" என இலக்கொன்றை தன் மனதில் ஏற்படுத்தி கொள்கிறாள். இவ்வாறு நினைத்து அதன்படி நல்வாழ்வு வாழும் அந்தப்பெண் சுவர்க்கத்திலே பிறவியெடுப்பாள். அதேபோல் இன்னொரு பெண் இருக்கிறாள். அவளும் புத்தபகவானது தர்மம் தொடர்பாக அறிந்திராத காரணத்தினால் திருட்டு குணம் படைத்த மனைவியானாள். அவளுக்கும் இந்த தர்மத்தினை கேட்கும் சந்தர்ப்பம் ஏற்படுகிறது. அவள் அதன் பின்னர் "நான் எவ்வாறாவது நல்ல மனைவியாக மாற வேண்டும்" என இலக்கொன்றை தன் மனதில் ஏற்படுத்தி கொள்கிறாள். இவ்வாறு நினைத்து அதன்படி நல்வாழ்வு வாழும் அந்தப்பெண் சுவர்க்கத்திலே பிறவியெடுப்பாள்.

இன்னுமொரு பெண் இருக்கிறாள். அவளும் புத்தபகவானது தர்மம் தொடர்பாக அறிந்திராத காரணத்தினால் எஜமானி மனைவியானாள். அவளுக்கும் இந்த தர்மத்தினை கேட்கும் சந்தர்ப்பம் ஏற்படுகிறது. அவள் அதன் பின்னர் "நான் எவ்வாறாவது நல்ல மனைவியாக மாற வேண்டும்" என இலக்கொன்றை தன் மனதில் ஏற்படுத்தி கொள்கிறாள். இவ்வாறு நினைத்து அதன்படி நல்வாழ்வு வாழும் அந்தப்பெண் சுவர்க்கத்திலே பிறவியெடுப்பாள். அவ்வாறில்லாது தொடர்ந்தும் அந்த பாவமிகுந்த வாழ்வினையே வாழ்ந்து வந்தால் அவர்கள் நிச்சயமாக

மரணத்தின் பின் நரகத்திலேயே பிறக்க நேரிடும் என புத்தபகவான் மொழிந்தார்.

## தேவலோகம் செல்லும் புண்ணியமிகுந்த மனைவிமார்

அடுத்ததாக சுவர்க்க உலகத்தில் மறுபிறவியெடுக்க கூடிய நான்கு மனைவியரை பற்றி புத்தபகவான் மொழிந்தார். முதலாவது மனைவிதான் **(மாத்ரு பார்யா)** தாயை போன்ற மனைவி. புத்தபகவான் இவ்வாறு விபரிக்கிறார். **(யா சப்பதா ஹோதி ஹிதானுகம்பினி)** அவள் எப்போதும் இரக்க குணம் படைத்தவளாக இருப்பாள். தனது கணவன், பிள்ளைகள், உறவினர்கள் என அனைவர் மீதும் அன்பு கொண்டவளாகவும் இரக்கம் கொண்டவளாகவும் இருப்பாள். **(மாதாவ புத்தங் அனுரக்கதே பதிங்)** தனது பிள்ளை வீட்டிலிருந்து வெளியே சென்றால் அந்தப்பிள்ளையின் தாய் "என்னுடைய பிள்ளை சாப்பிட்டானோ தெரியவில்லை. பிள்ளை என்ன செய்கிறதோ தெரியவில்லை எவ்வித சங்கடமும் இன்றி வீட்டிற்கு வர வேண்டும்" என யோசிப்பாள். அத்தோடு அந்தப்பிள்ளை வீடு திரும்பும் போதும் தாய்க்கு கவலையாக இருக்கும். பாவம் பிள்ளை நன்றாக களைத்து போய் இருக்கிறது. மிகவும் சிரமப்பட்டு இந்த பிள்ளை வருகிறது என கவலைப்படுவாள். தாயை போன்ற மனைவி இது போன்ற எண்ணத்தை கொண்டு தன் கணவனை கவனிப்பாள்.

## தாயை போன்ற தாரம்.

கணவன் தொழிலுக்கு செல்ல ஆயத்தமாகும் போது மனைவி இனிமையான மொழிகளை பேசி தன் கணவனின் மனதை குளிர்வித்து வழியனுப்புகிறாள். அதன்பின் அன்புடன்

இவ்வாறு சிந்திக்கிறாள். "பாவம் எமக்காக மிகவும் கஷ்டப்படுகிறார். நேரத்திற்கு ஒரு தேனீராவது குடிக்கிறாரோ தெரியாது". அதேபோல் கணவன் வீடு திரும்ப தாமதமாகும் போது, "ஐயோ! கூட்டம் நிறைந்த பஸ்ஸில் மிகவும் கஷ்டப்பட்டு வருவாரே" என கவலையுறுகிறாள். கணவன் வீட்டிற்கு வருவதை கண்ணுற்றதுமே ஓடிச்சென்று தேனீர் தயாரித்து கொடுத்துவிட்டு அன்பு மொழி பேசுகிறாள். தனது பிள்ளையை போல் கணவனை கவனித்துக்கொள்வாள். **(ததோ தனங் சம்பதமஸ்ஸ ரக்கதி)** கணவன் உழைக்கும் பணத்தை சிக்கனமாக செலவு செய்வாள். அவ்வாறு செலவழிக்கும்போது "எங்களுக்காகத்தானே இவ்வளவு கஷ்டப்பட்டு உழைக்கிறார். இந்த பணத்தினை உழைக்க எவ்வளவு பாடுபட்டாரோ! அதனால் இதனை மிகக்கவனமாக செலவு செய்யவேண்டும்." என்று நினைப்பாள். இம்மாதிரி ஒரு தாயைப்போல் நடந்து கொள்ளும் மனைவியையே புத்தபகவான் மாத்ரூ பார்யா என மொழிந்தார்.

**முன்மாதிரியாக எடுக்கக்கூடிய அபிமானம் மிக்கவர்கள்.**

எவரேனும் ஒரு பெண்ணுக்கு மாத்ரூ பார்யாவாக வாழக்கிடைத்தால் அவள் நற்பேறுகள் பெற்று சுவர்க்கத்திலே பிறவி எடுப்பாள். புத்தபகவானது காலத்தில் வாழ்ந்திருந்த 'விஷாகா' எனும் உபாசகி ஒரு தாயை போன்ற மனைவியாவாள். விஷாகா தன் கணவனுக்கு மாத்திரம் அல்லாது முழு பரம்பரைக்கே தாய்மை குணத்தை பரப்பியவளாவாள். இதன் காரணமாகவே இவள் 'மிகார மாதா' என பிரசித்தி பெற்றாள். 'மிகார' என பெயர்கொண்ட பரம்பரையில் தான் விஷாகா திருமணம் முடித்தாள். விஷாகாவின் மாமனாரும் மாமியாரும் புத்தபகவானிடம்

“சுவாமியே பாக்கியமுள்ளவரே! இவள் எமது மருமகள் அல்ல. எமது தாயாவாள்” எனக்கூறினர். இந்த சம்பவத்தின் பின்னே அவள் மிகாரமாதா என அனைவரின் மத்தியிலும் கீர்த்தி பரவியது. மனைவியருள் உயர்ந்த மனைவி என புகழ்பெற்றது யார்? தாயை போன்ற மனைவிதான். ஒரு தாயைப்போல வீட்டின் சகல விடயங்களையும் கவனித்து பணிபுரியும் திறமை மனைவியிடம் இருக்க வேண்டும்.

**பாருங்கள் மருமகளை.**

ஒரு சந்தர்பத்திலே தனது மாட்டுப்பண்ணையிலே இருந்த ஒரு பசு கன்றினை ஈன்றெடுக்க தயாரானபோது விஷாகா அந்த மாட்டுத்தொழுவத்திற்கு சென்று ஒரு பணிப்பெண்ணை போல வேலை செய்தாள். இந்தச்சம்பவம் தான் விஷ ாகாவிற்கு அந்த நற்பெயர் வழங்கப்பட முதல் காரணமாக அமைந்தது. ஏனெனில் அன்று அவள் “நான் இந்த வீட்டின் அனைத்து கருமங்களையும் தேடி பார்த்து செய்ய வேண்டும். இக்குடும்பத்தின் அனைவருக்கும் நன்மையை ஏற்படுத்த வேண்டும். அது எனது கடமை” எனக்கூறினாள் .அதனை கேள்வியுற்ற அந்தக்குடும்பத்தினர் “இவளென்றால் ஒரு மருமகள் அல்ல. ஒரு தாயே!” என மிகவும் மகிழ்ந்தனர். ஆம், ஒரு தாயிடம் இருக்கவேண்டிய அனைத்து குணநலங்களும் விஷாகாவிடம் குடிகொண்டிருந்தன என்றால் அது மிகையாகாது.

**கணவனின் அதிஷ்டத்தை நிர்ணயிப்பது இப்படித்தான்.**

எவரேனும் ஒரு மனைவி தாய்ப்பாசத்துடன் தன் கணவனை கவனிப்பாளாயின் அந்த கணவன்தான் இவ்வுலகில் வாழும் அதிஷ்டமிக்க கணவனாவான். அந்த மனைவி இவ்வுலகில்

வாழும் புண்ணியமிகுந்த மனைவியாவாள். அப்படியாயின் புத்தபகவானின் தர்மத்தினூடாகத்தான் எமது வாழ்வை சிறப்பாக அமைத்து கொள்ள முடியும். தாய்மை குணம் படைத்த மனைவியால் சீக்கிரமாகவே தர்மத்தை உய்த்துணர்ந்து கொள்ள முடியும். ஏனெனில் அவளது வாழ்விற்கு பாவங்கள் சேர்வது மிகவும் குறைவாகும். அனேகமானோர்க்கு இந்த தார்மீகப்பாதையை விருத்தி செய்து கொள்ள முடியாதிருப்பதற்கு காரணம் தத்தமது வாழ்வில் ஏற்படுத்தி கொண்டுள்ள குணவியல்புகளில் உள்ள குறைபாடுகள் தான் என்பது எமக்கு புலனாகிறது.

## அனைத்திற்கும் முன்னர் குணநலன்னை வளர்த்து கொள்ளுங்கள்.

எமது வாழ்விற்கு தர்மத்தினை இணைத்து தார்மீகமான வாழ்வை வாழுவதற்கு எமக்கு பெருந்தேவையிருப்பினும் அதற்கு தடையாக இருப்பது எமது மனங்களில் நாமே ஏற்படுத்திக்கொண்ட பலவீனங்களேயாகும். அதனால் எவராவது இதுவரை கொடூர (வதக) மனைவியாகவோ, திருட்டு குணம் கொண்ட (சோரி) மனைவியாகவோ அல்லது எஜமானி (ஆர்யா) மனைவியாகவோ வாழ்ந்திருந்தால் அதிலிருந்து மீள்வதற்கு முயற்சி செய்ய வேண்டும். விரைவாகவே தாய்மை குணம் கொண்ட மனைவியாக வாழ்வதற்கு முயற்சி செய்ய வேண்டும். எவ்வளவுதான் தர்மத்தினை பயின்று தியான வகுப்புக்களில் கலந்து கொண்டாலும் அவளுக்குள் இருப்பது கொடூர மனைவியின் குணம் என்றால், திருட்டு மனைவியின் குணாதிசயம் அல்லது எஜமானி மனைவியின் குணாதிசயம் என்றால் தர்மத்தில் அவளது மனம் நிலைத்திராது. தர்மமானது நிலைத்திருப்பது உண்மையான இரக்க குணம் படைத்த,

சாந்தமான, தனது குறைகளை நிவர்த்தி செய்து கொள்ள விரும்பும் மானசீக பின்னனியை கொண்ட ஒருவரிடமேயாகும்.

**சகோதரியை போன்ற மனைவியரும் உள்ளனர்.**

புத்தபகவான் மொழிந்த அடுத்த மனைவிதான் பகினி பார்யா எனப்படும் சகோதரியை போன்ற மனைவி. புத்தபகவான் இவ்வாறு விபரிக்கிறார். **(யதாபி ஜெட்டே பகினீ கனிட்டா)** வீட்டிலே மூத்த சகோதரன் இருந்தால் அந்த வீட்டில் இருக்கும் இளைய சகோதரி தன் சகோதரன் முன்னிலையில் ஆட்டம் போட மாட்டாள், பலமாக சிரிக்க மாட்டாள், கேலிக்கூத்துக்களை செய்ய மாட்டாள், சண்டை சச்சரவுகளில் ஈடுபடமாட்டாள். அது ஏன்? தனது மூத்த சகோதரனை இளைய சகோதரி மதிப்பதால்தான். கீழ்படிவாக இருப்பதால்தான். **(சகாரவா ஹோதி சகம்பி சாமிகே)** இதே போல் இந்த பகினி பார்யா தன் கணவனிடம் நடந்து கொள்வாள். தனது கணவன் முன்னிலையில் சத்தம் போட்டு சிரிக்க மாட்டாள், எதிர்த்து பேச மாட்டாள். தவறான முறையில் அவமரியாதை ஏற்படும் வண்ணம் நடந்து கொள்ளமாட்டாள். தன்னிச்சையாக நடந்து கொள்ள மாட்டாள். **(ஹிரிமனா)** கூச்ச சுபாவத்துடனே தன் கணவன் முன் நடந்துகொள்வாள். **(பத்துவஸானுவத்தினீ)** தனது கணவனுக்கு செவிசாய்ப்பாள்.

இந்த குணநலன்களை கொண்டவளையே புத்தபகவான் பகினீ பார்யா அதாவது சகோதரியை போன்ற மனைவி என மொழிந்தார். எமது சமூகத்தில் இவ்வாறாக வாழும் எத்தனையோ பெண்களை நாம் கண்டுள்ளோம். அந்தக்குடும்பங்கள் சமாதானத்துடனும் சகோதரத்துவத்துடனும் வாழ்கின்றன. இவ்வாறான

மனைவி தான் தர்மத்தின்படி வாழுவது மட்டுமன்றி தனது கணவனுக்கும் அதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி கொடுப்பாள். தான் தர்மத்தினை செவிமடுக்கையில் அவள் “எனது கணவருக்கும் இந்த தர்மத்தினை கேட்கவிருந்தால் எவ்வளவு நல்லது? இவரையும் எவ்வாறாவது தர்மத்தின்பால் ஈடுபடுத்த வேண்டும். தர்மத்தினை அவரும் விரும்பினால் எவ்வளவு நன்றாக இருக்கும்” என சிந்திப்பாள்

## போற்றுதற்குரிய ஒரு மனைவி

எனக்கு தெரிந்த ஒரு தாயிருந்தாள். அவருடைய கணவன் தொழிலுக்காக வெளிநாடு சென்று தவறான காம செயலில் ஈடுபட்டு அதனால் ஒரு புற்றுநோயையும் ஏற்படுத்திக்கொண்டு தம் வீட்டிற்கு மீண்டும் வந்தார். அப்போது அந்த மனைவி தனது கணவனை எவ்வித வெறுப்புமின்றி ஏற்றுக்கொண்டு மிகவும் கருணையோடும் அன்போடும் பணிவிடை செய்தார். அதுமட்டுமன்றி தர்மத்தினையும் சொல்லிக்கொடுத்தார்.

வேறொரு பெண் என்றால் “நீ என்னை தன்னந்தனியே விட்டுச்சென்றது மட்டுமல்லாமல் தவறான வேலைகளை செய்து நோய் வந்த பின்தான் என் ஞாபகம் வந்ததா?” எனக்கேட்பாள். பகைமையை மனதில் ஏற்படுத்திக்கொள்வாள். ஆனால் இந்த மனைவி அவ்வாறு செய்யவில்லை. தனது கணவன் நோயாளியாக தனியாக எழுந்திருக்கக்கூட முடியாத சந்தர்ப்பங்களில், இந்த தாய்தான் அனைத்து பணிவிடைகளையும் செய்தார். எனக்கு அந்தத்தாய் ஒரு கடிதம் எழுதியிருந்தார். அந்த கடிதத்தில் “சுவாமியே எனது கணவன் இப்படிப்பட்டவர். இத்தகைய நோயால் பீடிக்கப்பட்டுள்ளார். நான் அவருக்கு மிகவும் அன்புடன் பணிவிடை செய்து தர்மத்தினையும் உபதேசித்து

வருகிறேன். இவரின் மறுவாழ்வினை எப்படியாவது சுவர்க்கத்தில் பிறக்க வைப்பதே எனது ஒரே நோக்கமாகும். தங்களுக்கு வசதியிருப்பின் எமதில்லத்திற்கு வருகைதந்து உதவுங்கள்" என எழுதப்பட்டிருந்தது.

**தர்மத்தினை பின்பற்றும் மனைவியரது இலட்சணங்கள்.**

ஒருநாள் நானும் அந்த இல்லத்திற்கு சென்றேன். அந்த கணவனுக்கு எழுந்து நிற்கக்கூட முடியவில்லை. அவரின் இடுப்பிற்கு கீழ் உணர்வில்லை. அந்த கணவன் அழுதழுது கூறலானார். "சுவாமியே எனது வாழ்வில் கடந்துபோன அறுபது வருடங்களை திரும்பி பார்க்கும்போது அது ஒரு செப்புக்காசுக்கேனும் பெறுமதியானதாக இல்லை. நான் இந்தக்கட்டிலில் நோயினால் வீழ்ந்து ஆறு மாதங்களே ஆகின்றன. இந்த ஆறு மாதங்கள்தான் எனது வாழ்வின் மிகவும் பெறுமதியான காலகட்டம். என்னுடைய இந்த மனைவி தங்களது தியான நிகழ்ச்சிகளில் பங்குபற்றி தர்மத்தினை கேட்டறிந்து வந்து என் பக்கத்தில அமர்ந்து எல்லாவற்றையும் எனக்கு சொல்லித்தருவாள்.

**சிறந்த நண்பனாகிய என் மனைவி**

மேலும், அந்த கணவர் இவ்வாறு கூறலானார். "சுவாமியே! எனக்கு இப்போது எனது உடலை ஸ்கந்தங்களாகவும், தாதுக்களாகவும், நிறுவனங்களாகவும் (கண், காது, நாசி, நாவு, உடம்பு, மனம்) என வெவ்வேறாக உணர்ந்து கொள்ளமுடியும். நான் இவ்வாழ்வானது நிலையற்றது என்பதனை 'விபஸ்ஸனா தியானம்' மூலம் கொஞ்சம் கொஞ்சமாக உணர்ந்து கொள்கிறேன்". பாருங்கள், தர்மத்தின்படி வாழ்வினை நடத்தும் மனைவியரது

குணநலன்கள் எப்படியானதென்று. அந்த தாய் தனது மனதில் குரோதத்திற்கு இடமளிக்காது பொறுமையோடும் அன்போடும் தனது கணவனுக்கு பணிவிடை செய்கிறாள். இவர்கள் இருவருக்கும் தர்மத்தினை தமது வாழ்விலே உய்த்றிந்துக்கொள்ள முடியுமா? முடியாதா? கண்டிப்பாக முடியும்

## வெலன்டைன் காதலர்களின் கண்ணீர் கதை

இதற்கு முற்று முழுதாக மாறுபட்ட சில கணவன்மார் மனைவிமார் இருக்கிறார்கள். "ஒவ்வொரு பிறப்பிலும் உன்னிடம் பழிவாங்காமல் விடமாட்டேன்" என வைராக்கியம் பூணுவார்கள். நாம் வாழும் சமூகத்திலே இவ்வாறானவர்கள் எத்தனையோபேர் உள்ளனர். இப்பேர்ப்பட்டவர்கள் பிறவிக்கடலில் வீழ்ந்து மீண்டும் புண்ணியமிருந்தால் மனிதர்களாக பிறந்து காதலர் தினத்திலே மீண்டும் சந்திப்பார்கள். அதன்பிறகு ஒரு ரோசாப்பூவை ஏந்திக்கொண்டு ஓடுகிறார்கள். "இதோ என்னுடைய ஆருயிர் காதலன் வந்துவிட்டான்" என கவிதைகள் பாடிய வண்ணம். சிலநேரம் இவ்வாறு சந்தித்தது இதற்கு முற்பிறவிகளில் 'பழிவாங்குவேன்' என சங்கற்பம் பூண்டவர்களாகவும் இருக்கலாம். திருமணத்திற்கு பின்னர் சொற்பகாலம்தான் மனிதர்களாக இருவரும் வாழ்வார்கள். ஓரிரு மாதங்களுக்கு பின்னர் பேயும் பிசாசும் போல் அடித்துப்பிடித்து கொண்டு கண்ணீரும் கம்பலையுமாகத்தான் வாழ்நாள் முழுவதையும் கடத்த வேண்டியதாக இருக்கும். இவ்வாறானவர்கள் எத்தனையோ பேர் எம்மை சூழவுள்ள இந்த சமூகத்திலேயே இருக்கிறார்கள் அல்லவா?

இதனிலிருந்து நாம் விளங்கிக்கொள்ளக்கூடிய ஒரு

விடயம் தான் குடும்ப வாழ்விற்கு தாயின் பாசம் மிக மிக முக்கியமானதாகும். அதுமட்டுமல்லாது ஒரு மனைவியிடம் இருந்து ஒரு சகோதரத்தன்மை கலந்த ஒரு பாசமும் அந்த குடும்பத்திற்கு தேவையானதாகும். இவ்வாறான உன்னதமான குணாதிசயங்கள் அவர்களின் உள்ளங்களில் குடிகொண்டிருப்பின் அந்தக்குடும்பம் சௌபாக்கியமானதாக மாறும். அது மட்டுமல்லாது அவர்கள் புத்தபகவானது தர்மத்தினையும் உய்த்துணரக்கூடிய அரிய பாக்கியத்தையும் பெறுவது இலகுவானதாக இருக்கும்.

## இறுமாப்பினால் மோட்சத்தை அடைய முடியாது.

புத்தபகவான் மொழிந்த தர்மப்பாதையில் பயணிப்பது நாம் நினைப்பது போல் இலகுவான விடயமல்ல. தர்மத்தினை வாழ்விற்கு பழக்கப்படுத்தி வாழ்வில் அதனை உய்த்துணருவதை போன்ற கடினமான சவால் இந்த உலகில் வேறு எதுவுமில்லை. வீடுபேறு அடையும் வண்ணம் தர்மத்தினை வாழ்விற்கு பழக்கப்படுத்துதல் என்பது மிகவும் விழிப்புணர்வோடும், நல்லறிவோடும் செயற்படுத்த வேண்டிய மிக நுண்ணியதொரு செயற்பாடாகும். அவ்வாறில்லாமல் "ஆ! நான் இப்போது தியான நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறேன். இப்போது எனக்கு படிச்ச சமுப்பாதம்*, பஞ்ச உபாதானஸ்கந்தம்** என்பன மனப்பாடம். நான் எப்படியாவது இப்பிறவியிலேயே வீடுபேறு அடையாவிட்டால் பார்த்து கொள்ளுங்களேன்.." எனும் இவ்வாறான நடத்தைகளினால் ஒருபோதும் தர்மத்தினை உய்த்துணர முடியாது.

எனக்குத்தெரியும் சில தாய்மார்கள் தியான நிகழ்ச்சிகளுக்கு வருகை தந்து தர்மத்தினை பற்றி கொஞ்சநஞ்சமாக

---

*.காரண காரிய செயற்பாடு

** உருவம், அனுபவிப்பு, இணங்காணல், சிந்தனை, விஞ்ஞானம் எனும் ஐந்தின் மீது கொண்ட பற்றுதல்

அறிந்து கொண்டு முழு வீட்டையும் தம் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வர முயல்கிறார்கள். சிலர் வீடுகளுக்கு சென்று தன் கணவனிடம் "நான் இப்போது தனியான ஒரு வாழ்வை வாழ்பவள். நீங்கள் உங்களுக்கு விரும்பியவாறு வாழுங்கள்." என்று கூறுகிறார்கள்.

அதேபோல் தம் பிள்ளைகளிடமும் "நீங்களே சமைத்து சாப்பிடுங்கள். இனிமேல் நான் உங்களை பற்றி தேடிப்பார்க்க மாட்டேன். நான் இவற்றை துறந்து இருக்கிறேன்." என்றும் கூறுகிறார்கள். அதன் பிறகு என்ன நடக்கும்? பிள்ளைகள் இந்தத்தாயாரை தியான நிகழ்ச்சிகளுக்கு வராதபடிச் செய்துவிடுவார்கள். கணவனோ தியானங்களை பயிற்றுவிக்கும் எம்மையும் சேர்த்து தூ ற்றுவார். இவ்வாறு ஏச்சுக்களை கேட்ட சில மனைவிமார் என்னிடம் அழுதுக்கொண்டே வந்து "சுவாமி எனது வீட்டார் தங்களையும் தூற்றுகின்றனர். இவர்கள் தர்மத்தினையே எதிர்க்கின்றனர். கொடியவர்கள் மத்தியில் தான் நான் இருக்கிறேன். தியான நிகழ்ச்சிகளுக்கு என்னை வர அனுமதிக்கவில்லை." என்று. முறையிடுகின்றனர். தேடிப்பார்த்தால் இது யாருடைய தவறு? முழுமையான தவறு மனைவியுடையதே!

**வீட்டினை புண்ணிய ஊற்றாக கருதுங்கள்.**

தர்மத்தை பின்பற்ற முயற்சி செய்யும் பெண்களுக்கு நான் கூறுவது இதுதான் "அதிகாலை துயிலெழுந்து தன் கணவன் மீது கருணை உள்ளம்கொண்டு தேனீர் தயாரித்து அவர் அருகில் கொண்டு சென்று கொடுங்கள். அது ஒரு புண்ணியம். மைத்ரீ குணத்தோடும் கருணை நிரம்பிய குணத்தோடும் உணவு சமைத்து அதனை தன் கணவன்

மற்றும் பிள்ளைகளுக்கு பரிமாறுங்கள். இவை நீங்கள் வாழ்வில் சேகரித்து கொள்ளும் புண்ணியங்களேயாகும். ஆம் இப்படித்தான் தர்மத்தினை வாழ்விற்கு பழக்கப்படுத்த வேண்டும்.

அழுதுகொண்டு முறைபாடுகளை எடுத்து கொண்டு வருபவர்களுக்கு நான் இவற்றை கூறிய பின்னர் "அப்படியே செய்கிறோம்" என வீட்டிற்குச்சென்று சில நாட்களின் பின் என்னிடம் வந்து "சுவாமி! எனது கணவன் இப்போது தெய்வத்தை போல் நடந்து கொள்கிறார். நாம் இப்போது சந்தோஷமாக வாழ்கின்றோம்." என்று சொல்கிறார்கள். அப்படியென்றால் தவறு யாரிடம் இருந்திருக்கிறது? மனைவியாகிய தன்னிடமே தவறு இருந்துள்ளது. தர்மத்தினை பற்றி ஓரளவு கற்றுக்கொண்டு சிறிது தியானம் செய்தோம் என்பதற்காக ஏனையோரை கீழோர் என பார்ப்பதின் விளைவுதான் இது.

**கனிகள் பெருகும் போது கிளைகள் கீழ் நோக்கிவரும்.**

உண்மையாகவே, தர்மத்தினை பின்பற்றும் ஒருவராயின் ஒரு மரத்தில் கனிகள் அதிகரிக்கும் போது அதன் கிளைகள் எவ்வாறு கீழ் நோக்கி பணிந்து செல்லுமோ அதுபோல் நற்குணங்கள், நல்லொழுக்கங்கள், என்பன அதிகரிக்க அதிகரிக்க முன்னரை விட பணிவுள்ள ஒருவராகவே இருக்க வேண்டும். அதுதான் உண்மையாகவே தர்மத்தினை பின்பற்றும் ஒருவரது இலட்சணம். இவ்வாறான எத்தனையோ மனைவிமார்கள் எம் சமூகத்திலேயே உள்ளனர். சில கணவன்மார் என்னிடம் வந்து தம் மனைவியரை புகழ்ந்து பேசுவார்கள். "சுவாமியே! எனது மனைவியே என்னை நல்வழிப்படுத்தினாள். தானம் வழங்குவதற்கு, தியானம்

செய்வதற்கு, சீலத்தினை* பாதுகாப்பதற்கு என்னை நெறிப்படுத்தியது என் மனைவியே!” என கூறுகின்றனர். இதன் மூலம் எமக்கு தெளிவாகுவது இம்மாதிரியான மனைவியரே தர்மத்தினை சிறந்த முறையில் பின்பற்றுபவர்கள்.

## அனைத்து முறையிலும் வாழ்வினை நெறிப்படுத்துங்கள்.

தர்மத்தினை பின்பற்றும் ஒரு மனைவியானவள் தனது கணவன், பிள்ளைகள் உறவினர் என்போருக்கு பணிவிடை செய்பவளாகவும் வீடு, தோட்டம் என்பனவற்றை தேடிப்பார்த்து கவனிப்பவளாகவும் இருக்க வேண்டும். புத்தபகவானுடைய காலத்திலே, தாம் வசிக்கும் அறைகள் மற்றும் அதனை சூழ உள்ள பிரதேசம் என்பன சுத்திகரித்தல் என்பவற்றை செய்ததும் மனமாசுகளற்ற அரஹத் பிக்குமார்களே ஆவர். தர்மத்தினை பின்பற்ற விரும்பும் ஒருவர் தம் வாழ்வினை எல்லா முறையிலும் செம்மைப்படுத்த வேண்டும்.

## சகீ பார்யா (நண்பியை போன்றவள்)

அடுத்ததாக புத்தபகவான் தோழியை போன்ற மனைவியை பற்றி விபரிக்கிறார். இவள் ஒரு நண்பியை போன்ற குணவியல்புகளை கொண்டவளாக இருப்பாள். உங்களுடன் ஒன்றாகவிருந்த நல்ல நண்பனொருவர் நீண்ட காலத்திற்கு பின் உங்களை காண வருகிறார் என்று நினைத்து கொள்வோம். அவரின் வருகையை தொலைவிலேயே காணும் உங்களது நடத்தை இப்போது எவ்வாறிருக்கும்? கண்கள் அகல விரிந்து அறியாமலே புன்னகை மலர்ந்து “ஆ! இப்போது தான் வருகிறீர்களா?” என அவரது கைகளை பற்றிக்கொண்டு வீட்டினுள் அழைத்து வந்து

---

*. ஒழுக்கம். புத்த பகவானை சரணடைந்த ஒரு ஆரிய சீடன் கடைபிடிக்க வேண்டிய பல ஒழுக்கவிதிமுறைகள் உள்ளன. அதில் இல்லறத்தோர் கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டியவை ஐந்து. அவை முறையே. உயிர்களை கொல்லாமை, களவு எடுக்காமை, தகாத காமசெயலில் ஈடுபடாமை, பொய் உரைக்காமை, மது போதைபொருள் பாவிக்காமை.

குதூகலத்தோடு சம்பாஷனை செய்வீர்கள். நண்பியை போன்ற மனைவியும் இந்த செய்கையை ஒத்தவளாகவே இருப்பாள். தன் கணவன் வேலை விட்டு வரும்போதோ அல்லது வேறோரு பிரயாணம் சென்று திரும்பிவரும் போதோ அவரது வருகைக்காக காத்திருப்பாள். தன் கணவனை கண்டதும் இவளது மனம் பூரிப்படையும். மிகவும் அன்பு கொண்டவளாக ஓடிப்போய் கணவனின் கரத்தினை பற்றியவாறு வீட்டுக்குள் அழைத்து வருவாள். நீண்ட காலத்தின் பின்னர் ஒரு நண்பனை சந்தித்ததுபோல் சந்தோஷமாக பேசி மகிழ்வாள். தனது கணவனை அன்புடன் உபசரிப்பாள். இவள் தொடர்பாக புத்தபகவான் மேலும் விபரிக்கிறார். **(கோலைய்யகா)** இவள் குடும்பத்தினை மிகவும் நேசிப்பாள். **(சீலவதீ)** நன்நெறிகளை கொண்டவளாகவும் சீலத்தினை பாதுகாப்பவளாகவும் விளங்குவாள். **(பதிப்பதா)** கற்புநெறி தவறாதவள். தன் கணவனை தெய்வமாக போற்றுபவள். இவ்வாறான தோழியை போன்ற எத்தனையோ மனைவிமார் இந்த சமூகத்திலேயே உள்ளனர். இவ்வாறான குணப்பண்புகளை உடைய மனைவிமார்க்கும் தர்மத்தினை உய்த்துணரும் பாக்கியம் உள்ளது.

## பாலைநிலத்தில் செழிப்பை எதிர்ப்பார்க்க முடியுமா?

நாம் ஒரு பாலைநிலத்தில் செழிப்பு மிகுந்த பசுமையான ஒரு மரக்கன்றினை நாட்டினால் அதிலிருந்து சிறந்த வளர்ச்சியை எம்மால் எதிர்பார்க்க முடியுமா? முடியாது. ஆம், அதுபோலத்தான் குணநலன்கள் அற்ற, ஒருவர் எவ்வளவு தான் தர்மத்தினை கேட்டாலும், பயின்றாலும் தர்மத்தை உய்த்துணர முடியாது. தர்மத்தினை உய்த்துணர வேண்டுமாயின் குணநலன்களை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

## பணிப்பெண்ணை போன்ற மனைவி

புத்தபகவான் மொழிந்த இறுதியான மனைவிதான் “தாசி பார்யா” அதாவது பணிப்பெண்ணை போன்ற மனைவி **(அக்குத்தசன்தா வததண்டதஜ்ஜிதா)** எவ்வளவு துன்புறுத்தினாலும், கஷ்டம் கொடுத்தாலும், இம்சித்தாலும் தன் கணவனை ஒரு நாளும் இகழ்ந்து பேசமாட்டாள், கோபித்துக்கொள்ளவும் மாட்டாள். **(அதுட்டசித்தா பதினோ திதிக்கதி)** தன் கணவன் எவ்வளவு தொல்லைகள் தந்தாலும் தன் மனதில் கோபத்தினை ஏற்படுத்திக்கொள்ள மாட்டாள். பொறுமையுடன் இருப்பாள். **(அக்கோதனா)** கணவன் மீது பகைமை கொள்ள மாட்டாள். **(பத்துவஸ ானுவத்தினீ)** தன் கணவன் கூறுவதை செவிமடுப்பாள். இத்தகைய பண்புகளை உடையவளே தாசி பார்யா என புத்தபகவான் மொழிந்தார். தன் கணவனது இம்சைகளை பொறுத்துக்கொண்டு கோபத்தினை ஏற்படுத்திகொள்ளாத இத்தகைய மனைவிமார்கள் இன்றைய சமூகத்திலும் உள்ளனர்.

## மூவர் நரகத்திற்கு நால்வர் சுவர்க்கத்திற்கு

புத்தபகவான் இவ்வாறு மொழிந்தார். “இவ்வுலகத்தில் வாழும் அனைத்து வகையான சமூகங்களிலும் இவ் ஏழு வகையான மனைவியரை காணலாம். கொடூர மனைவி, திருட்டு குணம் கொண்ட மனைவி மற்றும் எஜமானியை போன்ற மனைவி இம்மூவருமே துஸ்சீலர்களாக (ஒழுக்கமற்றவர்களாக), துர்க்குணம் படைத்தவர்களாக, இரக்கமற்றவர்களாக வாழ்ந்து மரணத்தின் பின் நரகத்திலே பிறப்பார்கள்.

அதேபோல் தாயைபோன்ற மனைவி, சகோதரியை போன்ற மனைவி, தோழியை போன்ற மனைவி,

பணிப்பெண்ணை போன்ற மனைவி இவர்கள் நால்வருமே சீலம் மிக்கவர்களாக, கற்புநெறி தவறாதவர்களாக வாழ்ந்து மரணித்த பின்னர் சுகம் நிறைந்த சுவர்க்கத்திலே பிறவி எடுப்பர்." இதனிலிருந்து நாம் தெளிவாக ஒன்றினை அறிந்து கொள்ளலாம். அதுதான் ஒரு குடும்பத்தில் இன்பம் நிலைக்க வேண்டுமாயின், இல்லற வாழ்க்கை வெற்றிகரமாக அமைய வேண்டுமாயின் அந்த வீட்டில் வாழும் மனைவியின் செயற்பாடுகளிலேயே அது தங்கியுள்ளது என்பதாகும்.

**நான் இன்றிலிருந்து பணிப்பெண்ணை போன்ற மனைவியாவேன்.**

புத்தபகவான் சுஜாதாவிடம் வினவுகிறார், "புண்ணியமிகு சுஜாதா! இந்த ஏழு மனைவியருள் நீ எந்த வகையில் அடங்குகிறாய்?" என்று. அதற்கு சுஜாதா "பாக்கியமுள்ள புத்தபகவானே நான் இன்றிலிருந்து பணிப்பெண்ணை போன்ற மனைவியாவேன்" என பதிலளிக்கிறாள்.

மனதில் திடமிருக்கும் ஒருவளுக்கு தாயைபோன்ற மனைவியாகவோ, சகோதரியை போன்ற மனைவியாகவோ அல்லது தோழியை போன்ற மனைவியாகவோ மாறலாம். அதேபோல் மனதில் வீரியமிருந்தாள் ஒரு பெண்ணுக்கு பணிப்பெண் போன்ற மனைவியாகவும் மாறலாம். மேற்குறிப்பிடப்பட்ட நால்வகை மனைவியருமே அமைதியானவர்கள், பக்குவமானவர்கள். எம் சமூகத்தில் வாழும் பெரும்பாலான மனைவியர் பக்குவமானவர்களாகவோ அமைதியானவர்களாகவோ இல்லை. சில மனைவியர் இருக்கிறார்கள். கணவன் தொழிலுக்கு சென்று வீட்டுக்கு வரும்போதே சினமூட்டக்கூடிய விடயங்களை சேர்த்து வைத்திருந்து கணவன் வாசற்கதவை அடையும் போதே

அனைத்தையும் சொல்லுவாள். இனி கோபத்தினால் வெடித்தபடிதான் கணவன் வீட்டினுள் புகுவான். வீட்டிற்குள் வந்து வீட்டுப்பொருட்களை நிலத்தில் அடித்து பெரும் ஆரவாரம் செய்வான். ஏன் அப்படியான குடும்பங்கள் எம் சமூகத்தில் இல்லையா? தாராளமாக இருக்கின்றன. இவர்கள் அனைவருமே தம் வாழ்விற்கு பாவத்தை சேர்த்து கொள்பவர்களே.

## தவறு செய்பவர்கள் மனைவியர் மாத்திரமல்ல.

மேற்குறிப்பிட்ட இந்த விடயங்களின் மூலம் புலப்படுவது என்னவெனில் மனைவியானவள் நல்லவளாக இருந்தால் மாத்திரமே அந்தக்குடும்பம் சுபிட்சமடையும். அதேபோல் சில குடும்பங்கள் இருக்கின்றன. அங்கு மனைவியானவள் மிகவும் நல்லவளாக இருப்பாள். ஆனால் கணவன் மிகவும் கொடியவனாக இருப்பான். தனது மனைவியை பலவாறாக துன்புறுத்திய வண்ணம் இருப்பான். இவ்வாறான குடும்பங்கள் தோல்வியடைவது, மனைவியினால் அல்ல கணவனாலேயே. எனவே ஒரு கணவனுக்கு தாயை போன்ற மனைவியோ, சகோதரியை போன்ற மனைவியோ, நண்பியை போன்ற மனைவியோ, பணிப்பெண்ணை போன்ற மனைவியோ கிடைத்தால் அவன் அந்த மனைவியை மிகவும் நேசிக்க வேண்டும். தன் மனைவியின் பேச்சுக்கு செவிகொடுக்க வேண்டும். இவ்வாறான நற்குணங்களை கொண்ட மனைவியை கொண்ட ஒரு கணவன் அந்த மனைவியின் அப்பாவித்தனம், அவளது அன்பு, கருணை, அர்ப்பணிப்பு என்பவற்றை மீறிச்செல்ல முயற்சித்தால் அந்த காரணத்தினாலேயே அவன் மிகப்பெரும் பாவத்தை தன் வாழ்விற்கு சேர்த்து கொள்கிறான். இதன் மூலம்

அவன் தன் வாழ்வினை நரகத்திற்கு இட்டுச்செல்லும் அளவிற்கு பாவங்களை செய்கிறான்.

## வெற்றியின் அடையாளம்

எனவே, முக்கியமாக ஒரு வீட்டின் வெற்றி, பிள்ளைகளது பேரப்பிள்ளைகளது முன்னேற்றம், வியாபார வாழ்க்கையினது முன்னேற்றம் மற்றும் இல்லற வாழ்வினது திருப்தி எனும் அனைத்துமே நற்குணம் படைத்த இல்லத்தரசியின் மீதே தங்கியுள்ளது. இது தொடர்பாக புத்தபகவானது போதனைகளிலும் மிகத்தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. எமது சமூகத்தினை நோக்கினாலும் இது எமக்கு தெளிவாக புலப்படுகிறது. சிறந்த ஒரு மனைவியானவள் தமது கணவனையும் நல்வழிப்படுத்திகொண்டு தனது பிள்ளைகளையும் சிறப்பாக வளர்த்தெடுப்பது மட்டுமல்லாது அவர்களை தர்மத்தினை பின்பற்ற உதவியும் செய்கிறாள். இவ்வாறாக தார்மீகமான முறையில் வாழ்ந்து அவர்கள் மரணத்தின்பின் சுகம் நிறைந்த சுவர்க்கத்திலே பிறக்கின்றனர். பாருங்கள் புத்தபகவான், எமது வாழ்வினை திருத்திக்கொள்வதற்கான, நெறிப்படுத்தி கொள்வதற்கான எவ்வளவு விடயங்களை மொழிந்துள்ளார் என்று.

## சிந்திக்கும் திறனுடையவருக்கு தன் பிறப்பு சமயம் ஒரு தடையல்ல.

சமீபத்திலே ஒருநாள் முஸ்லிம் ஒருவர் என்னிடம் வந்தார். அவர் தனியே எமது புத்தகங்களை வாசித்து அவற்றில் கூறப்பட்டுள்ளவாறு ஆனாபானசதி தியானத்தை செய்துள்ளார். இவரது புண்ணியத்தின் காரணமாக அவர் மனதில் சமாதி ஏற்பட்டுள்ளது. இவர் “நான் இவ்வளவு காலமும் ஒரு சமயத்தினை பின்பற்றினேன். ஆனால்

இப்படியாக எம் மனத்தினை விருத்தி செய்யலாம், என அச்சமயத்தில் குறிப்பிட்டில்லையே. அந்த மனத்தை விருத்தி செய்ய முடியும் என்பதனையும் அவர்கள் அறியவில்லையே! இதனை நான் உணர்வுபூர்வமாகவே உணர்ந்துவிட்டேன். நான் புத்தபகவானை என் முழுமனத்துடன் சரணடைகிறேன்."எனக்கூறினார். சிந்திக்கும் திறனுடைய ஞானமுள்ள ஒருவர் எங்கிருந்தாலும், ஞானமுள்ளவர்களுக்கான இந்த ஒப்பற்ற தர்மத்தினை சந்தித்தவுடன் அதனை பற்றிக்கொள்வார். அவர் என்னிடம் "சுவாமியே நான் இப்போது எனது தந்தைக்கும் இந்த தர்மத்தின் பெறுமதியை உணர்த்தி, அவரையும் தர்மத்தில் நிலைப்படுத்தவே முயற்சி செய்கிறேன்" எனக்கூறினார்.

துரதிஷ்டம் என்னவென்றால் சம்பிரதாய பௌத்தர்களில் பலருக்கு இந்த ஒப்பற்ற தர்மத்தின் பெறுமதியை உணர்ந்து கொள்ள முடியாமையே. தர்மத்தினை அறைகுறையாக அறிந்துகொண்டு ஆணவம் மிகுந்து விவாதித்து கொண்டிருக்கின்றனரே தவிர தர்மத்தினை பின்பற்றும் எண்ணமே அவர்களிடமில்லை. 'பிக்கு போதி' எனப்பெயர் கொண்ட ஒரு அமெரிக்க பிக்கு இலங்கை பௌத்தர்கள் தொடர்பாக குறிப்பிடுகையில் "இலங்கையிலிருக்கும் பௌத்தர்கள் ஒரு பொன்மலையின் மீது அமர்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களுள் பலருக்கு அதன் பெறுமதி தெரியாது." எனக்குறிப்பிட்டுள்ளார். பாருங்கள் இது எவ்வளவு உண்மையான விடயம் என்று. இந்நாட்டு மக்களுக்கு இவ்வளவு பெறுமதியான தர்மம் கிடைந்திருந்தும் அதன் பெறுமதியை உணர முடியாத பலர் இருக்கின்றனர்.

**எழுவகை மனைவியரின் ஜாதகத்தினை பார்ப்போம்.**

திருமணத்தினை எதிர்பார்த்திருக்கும் இளைஞர் யுவதிகள் தத்தமது ஜாதகங்களை தூக்கிக்கொண்டு திரிவதைவிட, இந்த மனைவியரை பற்றி கூறப்பட்டுள்ள உபதேசங்களை பற்றி வாசிப்பீர்களாயின் உங்களது வாழ்வினை முழுமையாகவே வெற்றிகரமானதாக அமைத்து கொள்ள முடியும்.

எமக்கு தெரியும் பெரும்பாலானோர் தம் திருமணத்திற்கு முன்னரே ஜாதகப்பொருத்தம் பார்க்கிறார்கள். சுபநேரம் பார்க்கிறார்கள். ஏன் இவற்றை செய்கிறார்கள். ஒருவர் மீது ஒருவருக்கு நம்பிக்கை இல்லை. இது சரிவருமா? பிழைத்திடுமா? என்ற சந்தேகம். இருவரும் ஒருவரையொருவர் புரிந்து கொண்டு மும்மணிகளை சரணடைந்து, இந்த மூட நம்பிக்கைகளை விடுத்து, வாழ்வினை வளப்படுத்திக்கொள்ள முயற்சி செய்ய வேண்டும்.

## வெற்றிகரமான குடும்ப வாழ்க்கை

ஒரு மகள் இருப்பதாக நாம் நினைப்போம். அந்த மகளானவள் 'சோதாபன்ன'* நிலையை அடைந்தவள் என நாம் நினைப்போம். அவள் சோதாபன்ன நிலையை அடைந்த ஒரு மகனையே விவாகம் செய்துகொள்கிறாள். இவர்களுடைய இத்திருமண வாழ்வு சிறப்பானதாக அமையுமா? ஆம் அமையும். ஏனெனில் அவர்கள் புரிந்துணர்வுடனே மும்மணிகளை சரணடைந்தவர்களாவர். அவர்கள் கௌரவத்துடன் சீலத்தினையும் அனுசரிப்பார்கள். ஒழுக்கத்தினை பேணுவார்கள். இவர்களை ஒருபோதும் இன்னுமொருவருடைய புறங்கூறலின் மூலம் பிரித்துவிட முடியாது. அவர்களிடையே சந்தேகத்தினை ஏற்படுத்த

*முதலாவது வீடுபேற்று நிலை. இந்நிலையை அடைந்தவர் ஒருபோதும். நால்வகை நரகங்களில் பிறக்கமாட்டார். ஏழு பிறவிகளில் மோட்சத்தை அடைவார்.

முடியாது. ஒருவர் தமது காதலி அல்லது மனைவி மீது சந்தேகம் கொள்வாராயின் அவர் அவளது சீலத்தின் மீது அதாவது ஒழுக்கத்தின் மீதே சந்தேகம் கொள்கிறார். அதாவது அவள் மீது நம்பிக்கை இல்லாமையாகும். தர்மத்தினை பின்பற்றுவதால் வாழ்வினை வளம் மிக்கதாகவும் சிறப்புமிக்கதாகவும் அமைத்து கொள்ளலாம்.

## மூர்க்கதனத்திற்கு மருந்தில்லை.

ஒரு நாள் பெண்ணொருவர் என்னிடம் வந்து “ மோட்சத்தின் முதல்படியை (சோதாபன்ன) அடையும் போது வாழ்க்கை வெறுத்துவிடும் அல்லவா?” என்று கேட்டார். இதிலிருந்து எமக்கு புலப்படுவது என்னவென்றால் இவ்வாறானவர்கள் பௌத்தர்கள் என்ற போலி வேடத்துடனேயே இருக்கிறார்கள். இவர்கள் புத்தபகவான் மொழிந்த தர்மத்தினை அறியாது குருடர்கள் போல் வாழும் முட்டாள்களாகவே இருக்கிறார்கள்.

எமக்கு தெரியும் மகத தேசத்தை ஆட்சிசெய்த பிம்பிஸார மன்னன் சோதாபன்ன நிலையை அடைந்த ஒருவரேயாவார். அவர் இந்நிலையை அடைந்தார் எனும் காரணத்தினால் அவர் ஆட்சியை வெறுத்து ஒதுக்கிவிட்டிருந்தாரா? இல்லை. மிகவும் சிறப்பான முறையில் ஆட்சிசெய்தார். அதேபோல் அனாதபிண்டிக செல்வந்தர் சோதாபன்ன நிலையை எய்தியிருந்தவராவார். அவர் வாழ்வினை வெறுத்திருந்தாரா? இல்லை. தார்மீகமான முறையில் தமது வியாபாரத்தை செய்து கொண்டு சிறப்பான முறையில் வாழ்ந்தார். தற்காலத்தில் வாழும் பெரும்பான்மையான பௌத்த வேடதாரிகள் புத்தபகவான் மொழிந்த தர்மத்தினை அறியாதவர்களாக இருக்கிறார்கள். புத்தபகவான் மொழிந்த தர்மத்தினை பின்பற்றாதவர்களாகவே இருக்கிறார்கள்.

புத்த தர்மம் என்று வேறு மூடநம்பிக்கைகளை கொண்டவர்களாகவே இருக்கிறார்கள். புத்தபகவானுடைய தர்மத்தினை தெளிவாக புரிந்து கொண்டால், தர்மத்தின் பெறுமதியை உணர்ந்து கொண்டால், அவர் சிறிய பிள்ளை கூட அந்த தர்மத்தினை பின்பற்றுவதையே விரும்புவார்.

## அனைத்து சச்சரவுகளுக்கும் காரணம், தர்மத்தினை பின்பற்றாமையே

சோதாபன்ன நிலையை அடைந்த ஒரு மகனோ அல்லது மகளோ பெரிய பதவியை வகிக்கும் தொழிலொன்றை செய்வாராயின் அவர் ஊழல் மோசடிகளுக்கு துணை போவாரா? இல்லை. அரச உடைமைகளை அனுபவித்து கொண்டு இலஞ்சம் வாங்க முனையமாட்டார். அவர் ஒரு மேலான உயர்ந்த சேவையை சமூகத்திற்கு வழங்குவார். தாம் செய்யும் தொழிலை விருப்புடனும் நேர்மையாகவும் செய்வார். தர்மத்தினை பின்பற்றுவதனாலேயே வாழ்க்கையில் மெய்யான சிறப்பினை காணமுடியும்.

இந்த நாடு முன்னேற்றமடையாமல் இருப்பதற்கு முக்கியமான ஒரு காரணிதான் புத்தபகவானுடைய தர்மத்தினை பின்பற்றாமை, மற்றும் மூட நம்பிக்கைகளையும் மூட பார்வைகளையும்* முதன்மையாகக் கொண்டு சந்தேகத்துடன் எவ்வேலையையும் ஆரம்பித்தல். எமக்கு தெரியும் சுபநேரத்தை பார்த்தே இந்நாட்டில் அனைத்தும் தொடங்கப்படுகின்றன. பாராளுமன்றத்தை களைத்தல், கூட்டுதல், வேட்பு மனு தாக்கல் செய்தல், பிரசார வேலைகளை ஆரம்பித்தல் எனும் அனைத்துமே சுபநேரம் பார்த்துதான் செய்கிறார்கள். அரசியல்வாதியும் நல்ல நேரம் பார்த்துதான் வாக்கு சாவடிக்கு செல்கிறார். இதற்கெல்லாம் என்ன காரணம்? அவர்கள் புத்தபகவானை

---

*. இவை பத்து வகைப்படும் என புத்த பகவான் போதித்துள்ளார். மேலும் அறிந்துகொள்வதற்கு அருஞ்சொற்களை பார்க்கவும்.

உண்மையாகவே சரணடையாமையே ஆகும். மடமைமிக்க ஒரு சமூகத்தின் மூலம் இவ்வுலகிற்கு நன்மை ஏற்படாது. யாரேனும் ஒருவர் முழுமையான புரிந்துணர்வுடன் புத்தபகவானையும் அவர் மொழிந்த தர்மத்தினையும் ஆர்ய மகா சங்கத்தினரையும் சரணடைந்து அந்த தர்மத்தினை பின்பற்றி தம் வாழ்வினை வாழ்ந்தாரெனில் அவருடைய இவ்வாழ்வும் மறுவாழ்வும் சுபிட்சமே அடையும். அவர் வாழும் அந்த வாழ்வானது அவருக்கும் அவரை சூழவுள்ள அனைவருக்கும் நன்மையே விளைவிக்கும்.

## எங்கு பிறந்தாலும் துக்கம் துக்கமே

ஆதி அந்தம் புலப்படாத வண்ணம் பிறந்து கொண்டும் இறந்து கொண்டும் போகும் இந்த சம்சார வாழ்வு தொடர்பான பயத்தினை நினைவுறுத்துவதன் மூலம் நமது வாழ்க்கையை தாமதமின்றி தர்மநெறியில் ஈடுபடுத்திக்கொள்ள முடியும். அதுமட்டுமன்றி நரகத்தின் வேதனை, மிருகலோகம், பிரேதலோகம் என்பனவற்றில் வீழ்ந்து உயிர்கள் அனுபவிக்கும் வேதனைகள், என்பனவற்றை அடிக்கடி நினைவுகூர வேண்டும். வாழ்வின் உண்மையை உணர முயற்சி செய்ய வேண்டும். எங்கு பிறந்தாலும் அது துன்பமே என்பதனை உணர வேண்டும். புண்ணியவர்களே! இந்த மனித வாழ்வை எடுத்து கொண்டால் மனிதர்கள் எவ்வளவு துனபத்தினை அனுபவிக்கிறார்கள் என்று பாருங்கள். வெள்ளப்பெருக்கின் காரணமாக அல்லல் படுகிறார்கள், அதேபோல் ஒரு துளி நீருக்கேனும் வழியில்லாது வறட்சியால் பாதிக்கப்படுகிறார்கள். உண்ண உணவின்றி பருக நீரின்றி எத்தனையோ மனிதர்கள் ஒவ்வொரு நிமிடத்திலும் அல்லல் படுகிறார்கள். எதிர்பாராத

விபத்துக்களால் எத்தனையோ பேர் உயிரிழக்கின்றனர். இவ்வாறான ஆபத்தான சூழலில் தான் நாம் வாழ்கிறோம். நாம் எத்தகைய ஆடம்பரமிக்க வாழ்வினை வாழ்வதற்கு எதிர்பார்த்தாலும் ஒருபோதும் தொல்லைகள் இல்லாத வாழ்வு கிடைக்காது. மனித வாழ்வென்பது மிகவும் அரிதானதொன்றாகும். மனிதர்களாக நாம் வாழும் இந்த வாழ்வில் எம் அனைவரிலும் உள்ள குறைபாடுகளை திருத்திக்கொண்டு புத்தபகவான் மொழிந்த தர்மத்தின்படி எம் வாழ்வினை பிரகாசமுடையதாக மாற்றிக்கொள்ள முயற்சி செய்ய வேண்டும்.

### மனைவிக்கு ஏராளமான இலாபங்கள்.

ஒரு பெண்ணுக்கு நல்ல மனைவியாக முடிந்தால் அவளுக்கு சிறந்த முறையில் அவளது பிள்ளைகளை வளர்க்க முடியும். அவளது கணவனும் நற்குணமுடையவராக இருப்பார். குடும்பத்தில் அனைவரும் தர்மத்தினை பின்பற்றி தார்மீகமான வாழ்வினை வாழும்போது அவர்களுக்கு நல்ல உறவினர்கள் கிடைக்கிறார்கள். தர்மத்தின் படி வாழ்வினை கட்டியெழுப்பும் இவர்களது வாழ்வானது வெற்றிகரமானதாகவே அமையும். அதுமட்டுமல்லாது இவர்கள் முதியவர்களாக மாறும்போது ஏனையோரின் வணக்கத்திற்கும் கௌரவத்திற்கும் பாத்திரமானவர்களாக மாறிவிடுவார்கள்.

அதேபோல் ஒரு மனைவியானவள் ஒருபோதும் அகம்பாவத்தினால் தன்னை அழித்துக்கொள்ள கூடாது. தற்பெறுமை மிகுந்த, ஆணவமிகுந்த ஒருவரால் இந்த தர்மத்தின் வழியில் பயணம் செய்யமுடியாது. இந்த செருக்கின் காரணமாகவே ஏராளமான குடும்பங்கள்

அழிகின்றன. மனைவிக்கு மட்டுமல்லாது கணவனுக்கும் இம்மாதிரியாக நடக்கக்கூடும். யாரேனும் ஒருவரிடம் பணிவு எனும் உயர்ந்த குணம் இருப்பின் அவரால் தம் வாழ்வினை விருத்தி செய்துகொள்ளக்கூடிய அனைத்து விதமான நற்குணங்களையும் ஏற்படுத்திக்கொள்ள முடியும்.

## அரிய வாய்ப்பினை பயன்படுத்த வேண்டும்.

எனவே புண்ணியவர்களே! சிந்திக்கும் திறனுடைய மனித வாழ்வும் உன்னதமான புத்த தர்மமும் ஒருங்கே கிடைப்பதானது மிக மிக அரிதான விடயமாகும். நாம் அந்த அரிய விடயத்தை பெற்றவர்களாவோம். இதன் மூலம் எமது வாழ்வினை வளப்படுத்திக்கொள்ள நாம் முயற்சிசெய்ய வேண்டும்.

இதனை வாசிக்கும் மனைவிமார்கள், “நான் புத்தபகவான் மொழிந்ததைபோல் சிறப்பான முறையில் வாழ்வேன்” என உறுதி பூண வேண்டும். அதேபோல் கணவன்மாரும் “நானும் தர்மத்தின்படி வாழ வேண்டும், ஒரு நல்ல கணவனாக வேண்டும்”. என உறுதிபூண வேண்டும். இவ்வாறான முறையில் வாழ்ந்து இவ்வாழ்வினையும் மறுவாழ்வினையும் சுமுகமாக்கிகொள்ள வேண்டும். எனவே அனைவரும் திடமான ஒரு இலட்சியத்தினை ஏற்படுத்திக்கொள்ளுங்கள். “புத்தபகவானது தர்மம் கிடைத்த இந்த உன்னதமான தருணத்தை தவறவிடாமல் தார்மீகமான முறையில் வாழ்ந்து மிக விரைவிலேயே மாற்றமுறாத நாற்பேருண்மைகளை உய்த்துணர்வேன்” என திடமான ஒரு இலட்சியத்தினை ஏற்படுத்தி கொள்ளுங்கள்.

**சாது! சாது!! சாது!!!**

*"நமோ தஸ்ஸ பகவதோ அரஹதோ சம்மாசம்புத்தஸ்ஸ"*
அந்த பாக்கியமுள்ள அரஹத் சம்மாசம்புத்த பகவானுக்கு எனது நமஸ்காரமாகட்டும்!

# 02.

# கோதன சூத்திரம்

புண்ணியமிக்கவர்களே!

இன்று நாம் கற்பது அங்குத்தர நிகாயத்தில் ஏழாவது பகுதிக்குரிய மிகவும் அழகான ஒரு உபதேசத்தையே! புத்த பகவான் இந்த உபதேசத்தை "சாவத்திய" நகரில் உள்ள ஜேதவனாராமத்தின் தர்ம மண்டபத்தில் எழுந்தருளி இருக்கும் போது போதித்தார். இது மனித உள்ளங்களில் உருவாகும் குரோதம் காரணமாக ஏற்படும் விளைவுகள் பற்றி மிகவும் விரிவாகவும் விபரமாகவும் கூறப்பட்ட போதனையாகும்.

புண்ணியவர்களே, நாம் நமது பிள்ளை பருவத்தை நினைவு படுத்தி பார்த்தால் அந்த பருவத்தின் போது நாம் கூட்டாஞ்சோறு

---

* கிலேசங்களற்ற (மனமாசுகளற்ற)
** உன்னத சத்தியங்களை சுயமாக உய்த்தறிந்தவர்.

சமைத்தோம், பந்து விளையாடினோம், ஒளித்து விளையாடினோம், விளையாட்டு கடைகள் செய்தோம், நண்பர்களோடு சேர்ந்து அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடும் போது நாம் சண்டை சச்சரவுகளையும் ஏற்படுத்தி கொண்டோம். ஆனால் சண்டை பிடித்த அடுத்த கணமே நாம் மீண்டும் நண்பர்களாகிவிடுவோம்.

நன்றாக சிந்தித்து பார்த்தால், சிறு வயதில் நாம் நண்பர்களுடன் கோபித்து கொண்டோம் என்றால் அந்த கோபம் உள்ளத்தில் வேரூன்றி நிலைத்து இருக்கவில்லை. அதேபோல சிறு பராயத்தில் நாம் எமக்கு கிடைத்ததை ஒருவர்க்கொருவர் பகிர்ந்து கொண்டு மகிழ்ச்சியுடன் உண்டு குடித்தோமே தவிர மற்றவர்களது பொருட்கள் மீது பொறாமை கொள்ளும் குணம் அப்போது எமது உள்ளங்களிலே இருக்கவில்லை. வயது அதிகரிக்க அதிகரிக்க சிறு பராயத்தில் இருந்ததை விட பாரிய வகையில் எமது மனங்களில் மாற்றம் உண்டாகின்றது. நாம் வளர்ந்தவர்களாகிவிட்டதன் பின் சிறு வயதில் இருந்ததை விட மனம் பாரிய அளவில் மாற்றம் காண்கிறது. அதன் பின்னர் ஒரு சிறிய விடயத்திற்கு கூட நாம் கோபத்தை மனதில் தேக்கி வைத்து பொறாமைத் தீயால் எரிந்துகொண்டு விரட்டி விரட்டி பழிவாங்கும் குணத்தை மனதில் நிலைக்க செய்து விடுகின்றோம். அவ்வாறாயின் வயது கூடக்கூட உள்ளம் மாசடையக் கூடிய விடயங்கள் விருத்தியடைந்து கொண்டு முதியவர்களாக மாறும் போது, எஞ்சி விடுவது பாழடைந்த மனமும், பேசிய வார்த்தைகள் மூலமாக, உடல் நடத்தைகள் மூலமாக, நினைத்த எண்ணங்களின் மூலமாக சேர்த்து கொண்ட கருமங்களும் மாத்திரமே.

### கருங்கல் போன்ற கடினமான மனம் என்றால் வேண்டாம்

அனேகமானோர் தமது உள்ளத்தில் கோபம் உண்டாகிவிட்டால் அதனை அப்படியே மனதுக்குள்ளே பூட்டி வைத்து கொள்வார்கள். சாதாரணமாக ஒருவரின் உள்ளத்தில் கோபம்

உண்டாகிவிட்டாலும் அதனை உள்ளத்திலே தேக்கிவிடாது "நீரில் வரைந்த கோடு" போல அது உடனே மறைந்து விடுமானால் அப்படியானவருக்கு மிக விரைவில் தம் மனதை விருத்தி செய்து கொள்ள முடியும். அது போல் ஒருவரின் உள்ளத்தில் கோபம் உண்டானதன் பின்னர் அந்தக் கோபமானது ஓரிரு நாட்களில் மறைந்து விடுமேயானால் அதாவது "மணலில் வரைந்த கோடாக" ஆகிவிடுமானால் அப்படியான மனம் கொண்டவர் முயற்சியும் தைரியமும் கொண்டால் அவருக்கும் தம் மனதை விருத்தி செய்து கொள்ள முடியும். சிலர் இருக்கிறார்கள் கோபம் ஏற்பட்டு விட்டால் "கல்லில் செதுக்கிய கோடு" போல அந்தக் கோபத்தை மனதில் அழியாது நிலை நிருத்தி விடுவார்கள். அப்படியான மனம் கொண்டவருக்கு தம் மனதை விருத்தி செய்து கொள்ள கடும் முயற்சியும் உழைப்பும் மேற்கொள்ள வேண்டியதாக இருக்கும்.

**குரோதம் எமக்கு அளித்த சொத்து**

கொஞ்சம் சிந்தித்து பாருங்கள், இந்தக் குரோதத்தின் விளைவாக நாம் எத்தனை முறை நரகத்தில் பிறந்திருப்போம்? மிருகலோகத்தில் நாம் எத்தனை முறை கொடிய பாம்புகளாக பிறந்திருப்போம்? அதேபோல் நாம் எத்தனை முறை பேய் பிசாசுகளாக ஏனையோரின் உடல் கழிவுகளை உண்டு வாழ்ந்திருப்போம்? புத்த பகவான் எமக்கு மொழிந்துள்ளார், இந்தக்குரோதம் காரணமாகத்தான் ஒருவர் மானிட உலகில் பிறந்தால் கூட அவலட்சணமாகவும், ஏனையோரின் விருப்புக்கு ஆளாகாத ஒருவராகவும் பிறப்பார் என்று. அதுமட்டுமன்றி குரோதம் எனும் குணம் படைத்தோர் இதன் விளைவாக ஒவ்வொரு பிறப்பிலும் தமது வாழ்க்கையில் எவ்வித மகிழ்ச்சியும் நிம்மதியும் அற்றவர்களாக அழிந்து விடுவார்கள்.

## குரோதத்தின் ஏழு தீய விளைவுகள் ...

இந்த போதனையை வாசித்த பின்னர் உங்களுக்கு புரியும் புத்த பகவான் நிச்சயமாக இந்தக்கோபம் அல்லது குரோதத்திலிருந்து முழுமையாக விடுபட்டவர் என்று. குரோதத்திலிருந்து முழுமையாக விடுபடாத ஒருவருக்கு என்றால் ஒருபோதும் இவ்வாறான ஒரு உபதேசத்தை கூற முடியாது. கீழ்தரமான தீய செயல்களிருந்து விடுதலை பெற்ற பரிசுத்தமான உள்ளத்தை உருவாக்கி கொண்ட ஒருவருக்கு தான் இவ்வாறாக குரோதத்தின் விளைவுகளை கண்டு அவற்றை ஏனையோருக்கு சுட்டி காட்ட இயலும்.

எவரேனும் ஒரு பெண்ணோ அல்லது ஆணோ குரோதம் பாராட்டுபவராயின் அந்த குரோதத்தின் விளைவாக ஏழு விதமான துன்பங்கள் குரோதம் கொண்டவரை நோக்கியே விளைவுகளாக வரும் என்று புத்த பகவான் மொழிந்துள்ளார்.

## கோபம் கொண்டால் அழகு கெட்டு விடுமே!

இந்த உபதேசத்தில் புத்த பகவான் இவ்வாறு விபரிக்கிறார். குரோதம் பாராட்டும் ஒரு பெண்ணோ அல்லது ஆணோ இவ்வாறு விரும்புகிறார். அது என்ன? தனது கோபக்காரரை பார்த்து இவர் நினைக்கிறார் "ஐயோ! இவர் விகாரமடைந்து அவலட்சணமாக வேண்டும்" என்று அதற்கு என்ன காரணம்? இவர் விருப்பமில்லை தனது பகைவர்கள் அழகாக இருப்பதை பார்ப்பதற்கு. சிலவேளை தாம் குரோதம் பாராட்டும் ஒருவர் அழகாக ஆடை ஆபரணங்களோடு பாதையில் போவதை கண்ணுற்றால் என்ன செய்வார்? உடனே "நாசமாய் போக!" என தூற்றிகொண்டு மறுபக்கம் பார்த்து கொள்வார். நன்றாக தொண்டையை காரித்துப்புவார். காரணம் என்ன? தனது பகைவர்கள் அழகாக ஆடை ஆபரணங்களோடு இருப்பதை பார்க்கவும் விருப்பமில்லை. அதை நினைக்கவும் விருப்பமில்லை.

## நறுமணம், முகப்பூச்சுக்களால் குரோதத்தை மறைக்க முடியாது!

கௌதம புத்தபகவான் மொழிகின்றார், “இவ்வாறு குரோதம் பாராட்டும் ஒருவர் நன்றாக குளித்து, முழுகி, தலைவாரி எண்ணை பூசி, பூச்சூடி, அழகிய ஆடை ஆபரணங்களால் தன்னை அலங்கரித்து கொண்டு எவ்வளவுதான் அழகாக இருக்க முயன்றாலும் அவருக்கு அழகாக இருக்க முடியாது. அதுமட்டுமல்ல குரோத மனங்கொண்டு இருப்பதால் அவர் ஒரு விரும்பப்படும் நபராக, அழகானவராக சமூகத்தவர் காண மாட்டார்கள்”. இதோ இதுதான் குரோதம் பாராட்டும் நபருடைய வாழ்க்கையில் கிடைக்கும் முதலாவது வினைபயன்.

## தண்ணீர் குவளையை போன்ற மனம் வேண்டாம்.

இதனால் எமக்கு புரிவது என்னவென்றால் குரோதம் எனப்படுவது சாதாரணமான ஒன்றல்ல. நாற்பேருண்மைகளை உய்த்துணர்ந்து கொண்டு சன்சார துக்கத்திலிருந்து விடுதலை பெற விடாமுயற்சியும் வீரியமும் கொள்ளும் ஒருவருக்கு என்றால் இதனை தவிர்த்து கொள்ளக்கூடியதாக இருக்கும்.

புத்த பகவான் ஒரு உவமையுடன் கூறுகிறார், “நாற்பேருண்மைகளை உய்த்துணர்ந்து கொண்ட ஆரிய சீடனுடைய உள்ளமானது ஒரு கங்கையை போன்றது என்றும், ஆரிய சத்திய தர்மங்களை உணர்ந்து கொள்ளாத இந்த தர்ம மார்க்கத்திற்கு வராத தீயவனது உள்ளமானது ஒரு நீர்க்குவளையை போன்றது என்றும் கூறினார். மேலும் ஒரேயளவான இரு உப்பு கற்களை எடுத்து அந்த கங்கைக்கும் தண்ணீர்க் குவளைக்கும் போட்டால் குவளையில் உள்ள நீரானது ஒரு கணத்தில் உப்பு சுவையாக மாறி விடுகிறது. ஆனால் கங்கைக்கோ அது மிகவும் சாதாரணமானது” என புத்த பகவான் மொழிகின்றார். ஆம் அது போல ஒரு சிறிய தீய செயலை காரணியாக கொண்டு அந்த தீயவர்கள் நரகலோகத்தில் மறுபிறவி எடுக்கிறார்கள்.

ஆனால் ஆரிய சத்தியத்தை உய்த்துணர்ந்த நபரானவர் விழிப்புணர்வோடு இருப்பதனால் தீங்கு விளைவிக்கும் வினைபயன்கள் தாக்கம் செலுத்துவது குறைவானதாக இருக்கும். அவர் தனது சிந்தனையை நன்கு செயல்படுத்தி தீய செயல்களை வெற்றி கொள்கிறார்.

**குரோதத்தின் பயங்கரத்தியை பாருங்கள்...**

ஒரு பாட்டியார் இருந்தார். இந்த பாட்டியை அவளுடைய பேரன் பேத்திகள் எல்லோரும் அடிக்கடி கேலி செய்தனர். வரும் போதும் போகும் போதும் இவளுடைய சேலையை பிடித்து இழுத்து கோபத்தை வலுப்படுத்தும் வகையிலான கேலிகளை செய்யலாயினர். இந்த பாட்டிக்கு அவளுடைய மரணத்தருவாயில் நினைவில் வந்ததோ, அவரது பேரன் ஒருவன் அவருடைய சேலையை பிடித்து இழுத்ததே. பாட்டி இறந்து போய் ஒரு மாதம் கடந்த போது ஒரு நாள் இந்த பேரன் விளையாடிக் கொண்டிருக்கையில் கீழே விழுந்து அவனது கை முறிந்துவிட்டது.

பெற்றோர் இந்த பிள்ளையை மருத்துவரிடம் கொண்டு சென்று சிகிச்சை பெற்று கொடுத்து சுகமாக்கி வீட்டுக்கு அழைத்து வந்தனர். வந்ததும் அவன் மீண்டும், விழுந்த அதே இடத்தில் கை முறிந்தது. இந்த பெற்றோர் மீண்டும் மருத்துவரிடம் சென்று சிகிச்சை அளித்து ஒருவாராக குணமடைந்து வரும் வேளை மீண்டும் மூன்றாவது முறையாகவும் அதே இடத்தில் கை முறிவு ஏற்பட்டது. சில நாட்கள் கழியும் போது இந்தப்பேரனுடைய உடம்புக்குள் பாட்டியின் ஆவி புகுந்து கொள்ளலாயிற்று. பார்க்கையில் அந்த புடவையை பிடித்து இழுத்ததை மனதில் வைத்திருந்து குரோதத்துடன் மரணமடைந்து ஒரு பேயாக அந்த பாட்டி மாறியிருந்தாள். “இவன் நான் இருக்கும் வரை என்னை தொல்லை படுத்தினான். இப்போது நான் இவனைக்கொன்று நரபலியாக என்னிடம் எடுத்து கொள்வேன்”

எனக்கூறலானாள். இப்போது புரிகிறதா? குரோதத்தை மனதில் நிலைப்படுத்தி கொண்டதன் பின் ஏற்பட்ட விளைவினை? இப்போது இருப்பது பேரனும் பாட்டியும் அல்ல. இருப்பதோ அந்த அப்பாவி பிள்ளையும் பேயான ஆவியும்தான். ஆகவே புண்ணியவர்களே! குரோதம் எனும் இக்குணமானது நெருப்பை போன்ற பயங்கரமான ஒன்று. இதனை நாம் தூரத்தே விரட்டி எம் மனதில் இருந்து நீக்கி விட வேண்டும்.

## அவர்கள் நிம்மதியாக தூங்கவும் கூடாது

அடுத்து புத்த பகவான் இவ்வாறு உபதேசித்தார். குரோதம் பாராட்டும் ஒரு பெண்ணோ அல்லது ஆணோ இவ்வாறு விரும்புகிறார். அது என்ன? தனது கோபக்காரரையிட்டு இவ்வாறானதொரு குரோத எண்ணத்தை மனதில் ஏற்படுத்தி கொள்வார். “இவனென்றால் நிம்மதியாக தூங்கவே கூடாது. எந்நேரமும் வேதனையோடு தான் இருக்க வேண்டும்” என்று. இதற்கு காரணம் என்ன? தனது எதிரிகள் நிம்மதியாக தூங்குவதை காண விரும்பாமையே!. இவருடைய முழு நோக்கமும் ஏதாவது தொல்லை தரும் விடயமொன்றை, தூக்கத்தை கெடுக்க கூடிய பிரச்சினையை அவரது தலையில் புகுத்தி அவரை நிம்மதியாக தூங்கவிடாமல் செய்வதே! இதுவே இவரது விருப்பமாக இருக்கும்.

‘அனுருத்த’ எனும் தேரருக்கு ஒரு தங்கை இருந்தாள். அவளது உடல் முழுவதும் குஷ்டரோகத்தால் பாதிக்கப்பட்டிருந்தது. எவ்வளவுதான் மருந்துகள் பாவித்து சிகிச்சையளித்த போதும் நோய் குணமாகவில்லை. ஒரு நாள் அனுருத்த தேரர் தனது தங்கைக்கு இந்நோய் வரக்காரணம் என்ன என்பதை அறிய அவளது முற்பிறப்புக்களை பார்க்கலானார். இந்த நோயானது அவளது கர்ம வினையினால்தான் ஏற்பட்டுள்ளது என்பதை அறிந்துகொண்டார்.

## குரோத மனம் செய்த தீங்கு

முன்னொரு பிறவியிலே இவள் ஒரு மன்னனுடைய மனைவியாக அதாவது அரசியாக பிறந்திருந்த போது அந்த மன்னனுடைய இன்னொரு அழகான மனைவியின் அழகின் மீது பொறாமை கொண்டாள். இந்த பொறாமையினால் ஒவ்வொரு நாளும் அந்த அழகிய அரசியின் படுக்கையறையில் தெரியாமல் புகுந்து அவளது படுக்கையில் காஞ்சோண்டியை பூசிவிட்டு வருவாள். அந்த அரசி தூங்கபோகும் போதெல்லாம் உடல் முழுவதும் சொறிய ஆரம்பிக்கும். அவள் சொறிச்சல் தாங்க முடியாது படுக்கை முழுவதும் புரளும்போது இவள் என்ன செய்வாள்? மறைந்திருந்து இந்த காட்சியை கண்டு களித்து “நல்ல வேலை உனக்கு” என்று சொல்லிச்சொல்லி சந்தோஷப்பட்டாள்.

## பாவத்தில் ஈடுபடுவோருக்கு அது தேனாய் இனிக்குமாம்.

பாருங்கள், இவளது ஆசையெல்லாம் தனது குரோதத்துக்கு உள்ளானவள் நிம்மதியாக தூங்ககூடாது என்பதாகும். அந்த கர்மத்தின் விளைவாக தான் அவள் இந்த பிறவியில் உடல் முழுவதும் குஷ்டம் ஏற்பட்டு குணப்படுத்திக் கொள்ளமுடியாமல் அல்லல் பட்டாள். இந்த குஷ்டத்திலிருந்து அவளுக்கு முடிவொன்று கிடைக்க நல்லதோர் தீர்வொன்று அனுருத்த தேரர் கூறினார். அதாவது தன்னிடமுள்ள எல்லா நகைகளையும் விற்று அந்த பணத்தை கொண்டு ஒரு வசிப்பிடமமைத்து புத்தபிரான் தலைமையில் ஆரிய மஹா சங்கத்தினருக்கு பூஜை செய்யும் படி அவர் கூறினார். அதன்படி அவளும் செய்ய அதன் பின்னர்தான் அந்த குஷ்டம் முழுமையாக நீங்கி அவள் குணமடைந்தாள். பாருங்கள், இந்த குரோதம் எனும் குணம் இந்த சன்சார சாகரத்தில் எம்மை விரட்டி விரட்டி எவ்வளவு விபரீதங்களை தருகிறது என்று.

## நிம்மதியான தூக்கதிற்கு இதோ தீர்வு

புத்தபகவான் இவ்வாறு உபதேசித்தார். “பிக்குகளே! குரோதம் கொண்டவன் தனது கோபத்துக்கு உள்ளானவன் நிம்மதியாக உறங்குவதைக் காண விரும்பமாட்டான். அவன் இருப்பதோ குரோதத்துக்கு அடிமையான மனதுடன் குரோதம் நிறைந்து வழியும் மனதுடன்!” எனவே, புத்தபகவான் விளக்கியது யாதெனில் எவ்வளவுதான் சொகுசாக பஞ்சு மெத்தையிலே மிருதுவான தலையணைகளோடு உறங்க முயற்சி செய்தாலும் குரோதத்தின் விளைவாக அவனுக்கு நிம்மதியான ஒரு உறக்கம் கிடைப்பதில்லை. ஏன் என்றால் தூங்க முயற்சிக்கும் போது குரோதமானது உள்ளத்தை ஆக்கிரமித்துக் கொள்ளுகிறது. மனதுக்குள்ளால் தூ ற்றிக் கொண்டு கோபத்தால் வெடித்துக்கொண்டபடி தூங்க முயற்சித்தாலும் தூக்கம் வருவதில்லை.

நன்றாக எண்ணிப்பாருங்கள், உங்களுக்கும் இந்த அனுபவம் ஏற்பட்டு உள்ளதா? என்று. கோபம் மனதை கௌவிக் கொண்டால் இந்த அனுபவமானது எங்கள் எல்லோருக்கும் ஏற்படலாம், பாருங்கள் எமது மனதுக்குள்ளேயே ஏற்படும் குரோதமானது எங்களுடைய நிம்மதியான தூக்கத்தையே கெடுத்து விடுகிறது. நாம் எவ்வாறேனும் தீவிர முயற்சியால், தைரியத்தால் இந்தக் குரோதத்தை அழித்தொழிக்க வேண்டும்.

## வாளினால் அறுக்கும்போதும் கோபம் கொண்டால் எனது சீடனல்ல.

புத்தபகவான் கோபத்தை இல்லாதொழிப்பதற்கு அழகான உவமானமொன்றை உபதேசித்துள்ளார், “கள்ளர் கூட்டமொன்று வந்து தன்னைப் பிடித்துக் கொண்டு தலைகீழாக நிறுத்தி ஒரு வாளால் கைகால்களை வெட்டும் போதும் மனதில் கோபம் கொள்ளாமல் இருக்க முடியுமென்றால் அதுதான் மிகவும் உன்னதமான செயல்” என்று

அடுத்து புத்த பகவான் உபதேசித்தார் "குரோதம் பாராட்டும் ஒரு பெண்ணோ அல்லது ஆணோ இவ்வாறு விரும்புகிறார். அது என்ன? தனது கோபக்காரனை பார்த்து இவர் நினைக்கிறார் "ஐயோ இவனுக்கென்றால் படிப்பறிவு என்பதே வரக்கூடாது! என்று. தனது கோபக்காரர்கள் படித்து சமுதாயத்தில் கற்றறிந்தவர்களாக முன்னேறிச் செல்வதைக் காண இவர்கள் விரும்புவதில்லை. அதேபோல் சில ஆசிரியர்கள் இருக்கிறார்கள் தமது வகுப்பிலேயே இருக்கும் மாணவர்கள் கூட நன்றாக படிப்பதை விரும்புவதில்லை. இதனால் இந்த ஆசிரியர்கள் மாணவர்களுக்குச் சரியாக கற்றுக்கொடுப்பதில்லை.

இன்னும் சிலர், தமது சொந்த சகோதர சகோதரிகளுடைய பிள்ளைகள் நன்றாகக் கல்வி கற்பதை விரும்பாதவர்களாக இருக்கிறார்கள். அவ்வாறானவார்கள் தமது உறவினர்களது பிள்ளைகள் நன்றாக படித்து முன்னேறுவதைத் தடை செய்து கொண்டிருப்பார்கள். எனக்குச் சில பிள்ளைகள் தாங்கள் அனுபவிக்கும் கஷ்டங்கள் பற்றி அழுதழுது கடிதம் எழுதி அனுப்பியிருக்கிறார்கள். ஒரு கடிதத்தில் "சுவாமி! நான் எனது பெரியம்மாவின் வீட்டிலிருந்துதான் பாடசாலைக்கு போகிறேன். எனக்குச் சரியாக பாடங்களைப் படிக்க விடுகிறார்களில்லை. படித்துக் கொண்டிருக்கையில் வந்து மின்விளக்கை அணைத்துவிடுகிறார்கள். படிப்பதற்கு நான் பெரும் அவஸ்தைபட வேண்டியிருக்கிறது" என்று எழுதப்பட்டிருந்தது.

### ஏன் இவ்வாறு நடைபெறுகிறது..?

இவ்வாறான விடயங்கள் நடக்கக் காரணம் உண்டு. ஒரு காரணம்தான் பொறாமை, அடுத்ததுதான் தனது கருத்துக்களுக்கு ஏனையோர்கள் இணங்காமை. இன்னும் சிலர் இருக்கிறார்கள் தமது கருத்துக்களை ஏற்றுக் கொள்ளாதவர்களோடும் கோபித்துக் கொள்வார்கள். இவ்வாறு பல காரணங்களுக்காக

மனிதர்கள் கோபத்தை உண்டாக்கிக் கொள்கின்றனர். சிலரோ கோபத்தை வலிய உருவாக்கிக் கொள்ளும் ஆசையோடு அதற்கான காரணங்களைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். இப்படியான நபர்களுக்கு தான் நாங்கள் "அழுவதற்குத் தருணம் பார்த்துக் கொண்டிருப்பவருடைய கண்களுக்கு விரலால் குத்தினது போல" என்று சொல்லுவோம். இவ்வாறானவர்கள் கோபம் ஏற்படுத்தி கொள்ள ஒரு தருணத்தை எதிர்பார்த்து கொண்டிருப்பார்கள்.

### பிடிப்பதே வாலைத்தான்

பாருங்கள், இந்த மனம் என்பது எவ்வளவு நாசத்தை உருவாக்குகிறது என்று? இப்படி மற்றவர்கள் மீது பொறாமை என்னும் அழுக்காறு கொண்டு, மற்றவர்கள் முன்னேறுவதைக் காண விருப்பமில்லாது, மனதில் கோபத்தை வேரூன்றச்செய்து கொண்டிருக்கும் மக்களுக்கு என்ன நடக்கும் என்பதை புத்த பகவான் இவ்வாறு மொழிகின்றார்.**"அனத்தம்பி கஹெத்வா அத்தோ மே கஹிதோதி மஞ்ஞதி**" அதாவது தவறானதை பிடித்துக் கொண்டு "நான் சரியானதைத் தான் பிடித்துக் கொண்டுடிருக்கிறேன்" என்று அவர்கள் எண்ணுவர். சரியானதைப் பிடித்துக் கொண்டு "எனக்குத் தவறிவிட்டது" என்று அதை விட்டுவிடுவார்கள். அதனால் எந்நேரமும் அவருக்கு கிடைப்பது தவறான எண்ணக் கருத்தேதான், தவறான அறிவேதான்.

### குரோதத்தை முழுமையாக அழிக்க வேண்டும்

பகவான் புத்தர் இவ்வாறு உபதேசித்தார். "**தஸ்ஸமே தம்மா அஞ்ஞமஞ்ஞங் விபச்சனீகா கஹிதா தீகரத்தங் அஹிதாய துக்காய சங்வத்தன்தி கோதாபி பூதஸ்ஸ"** அதாவது குரோதத்தால் நிரம்பிய மனம் கொண்ட நபரானவர் ஒன்றுக்கொன்று பொருந்தாததை பொருந்தும் என்று நினைத்துக் கொண்டு அதைப் பற்றிக் கொள்வார்கள். சரியான

செயல் என்று நினைத்துக் கொண்டு தவறானதை எடுத்துக் கொள்வார்கள். நல்லது என்று நினைத்துக் கொண்டு கெட்டதைத் தேர்ந்தெடுத்துக் கொள்வார். நற்பயனுள்ளது என நினைத்துக் கொண்டு தீய பயனுள்ளதை தன்னகத்தே எடுத்துக் கொள்வார். புத்த பகவான் இவ்வாறு கூறினார். “ஒரு ஆணோ அல்லது பெண்ணோ குரோதத்தை தம் மனதுக்குள்ளே பழக்கப்படுத்திக் கொண்டாரேயானால் நல்லது, தீயது என்று தர்மத்தை பிரித்தறிந்து கொள்ளும் சக்தியை அவர் இழந்து விடுவார்”. ஆகவே குரோதத்தை முற்றாக நாங்கள் நீக்கிவிட வேண்டியது அவசியம்.

**அந்தோ இவர்களுக்கென்றால் நல்லது நடக்கவே கூடாது...**

அடுத்ததாக புத்த பகவான் இவ்வாறு உபதேசிக்கிறார். ஒரு கோபக்காரர் தான் கோபித்துக் கொண்டவரை பற்றி இவ்வாறு நினைப்பார். “ஐயோ! இந்த மனிதனுக்கென்றால் எந்தவிதமான வளமும் கிடைக்கக் கூடாது” என்று. இவரது கோபக்காரன் ஒரு காணியையோ, வாகனத்தையோ வாங்கிக் கொண்டால் இவரது மனதில் பெரும் குரோதமும் கோபமும் தோன்றி விடுகிறது. அவ்வாறே தன் கோபத்திற்கு உள்ளானவர் அழகாக ஒரு வீட்டினைக் கட்டிக் கொண்டால் அந்த வீட்டை பார்த்துப் பார்த்து இவர் கோபத்தால் வெதும்பிக் கொண்டிருப்பார். இப்படியானவைகள் எல்லாம் நடைபெறுவது குரோதம் கொண்ட மனதினால்தான்.

பாருங்கள்! இப்போது மனிதர்களது உள்ளங்களில் மிக அதிகமாக ஏற்படும் எண்ணங்கள் இப்படியானவைதானே? அப்படியானால் சிந்தித்துப் பாருங்கள்! உயிரோடு இருக்கும் மனிதர்களுள் இறந்ததற்கு பின்னர் அதிகமானோர் சுவர்க்கத்தில் பிறப்பார்களா? நரகத்தில் பிறப்பார்களா? என்று. தெளிவாகத் தெரிவது அதிகமானவர்கள் இறந்ததன் பின்னர் போவது மிருகலோகத்திற்கு. அப்படி இல்லாவிட்டடால்

நரகலோகத்திற்கு. அதற்கு காரணம் என்ன? குரோதமெனும் தீய குணம் ஆட்கொண்டபோது அது ஒரு இழிச்செயல், பாவச்செயல் என்பதை உணர்ந்திருந்தும், அந்த பாவச்செயலை விட்டொழிப்பதற்கு முயற்சி எடுக்காமையே. இன்னும் சிலர் இருக்கிறார்கள் இக்குரோதமானது ஒரு தீய குணம் என்பதை அறிந்துக் கொள்வதற்கேனும் மூளை அற்ற முட்டாள்களாக.

## பிள்ளைகளின் முன்னேற்றத்தை தடுக்கும் பெற்றோர்கள்.

இந்த காரணத்தினாலேயே தமது சொந்த பிள்ளைகள் கூட முன்னேறுவதைக் காணச் சகிக்காத பெற்றோர்கள் இருக்கிறார்கள். சில தாய்மார்கள் தாங்கள் ஈன்றெடுத்த பிள்ளைகளுக்கே கொடிய வினைகள் செய்வதையும் நான் அறிந்திருக்கிறேன். சில பிள்ளைகளது குடும்பங்களைச் சீரழிக்க முயற்சிக்கும் தாய்மார்கள் இருக்கிறார்கள். சில இடங்களில் குடும்பங்கள் கலையக் காரணகர்த்தாவாக தந்தையர்கள் இருந்திருக்கிறார்கள். இவ்வாறு செய்து இவர்கள் இன்பம் காணுகிறார்கள். இதுதான் குரோதத்தின் இலட்சணம். கருணையுள்ள பெற்றோர்கள் கலையப் போகும் குடும்பங்களை பாதுகாத்து அக்குடும்பங்களிலே சமாதானத்தை உருவாக்குகிறார்கள். தமது பிள்ளைகளதும் குடும்பத்தவரதும் அபிவிருத்திக்கும் முன்னேற்றத்திற்கும் உதவி கரம் நீட்டுவார்கள். ஆம். இதுதான் பிள்ளைகள் மீது பாசத்தைப் பொழியும் பெற்றோர்களது இலட்சணம்.

## எவ்வளவு உழைத்தாலும் முன்னேற்றம் அடையாததற்கு காரணம் என்னவோ...?

அடுத்ததாக, புத்த பகவான் குரோதம் மிக்க ஒரு பெண்ணோ அல்லது ஆணோ தமது கோபக்காரர்கள் அழகாக ஆடையணிகள் அணிந்து அழகுறத் திகழ்வதைக் காணச் சகிக்காதவர்களாக இருப்பதைப் பற்றி எடுத்துக் கூறுகிறார். தமது எதிரிகள் அழகாக இருப்பதை காண்பதானது, அவர்களது கண்களில்

முள் குத்துவது போலிருக்கும். இவ்வாறானவர்கள் தாங்கள் சுகமாக வாழவேண்டும் என்று எண்ணி எவ்வளவுதான் உழைத்தாலும் அவர்களது சொத்து சுகம் என்பன பாழாகிப் போய்விடுகின்றன. பாருங்கள், இந்த மக்கள் அழிந்து போவது மனதில் தோன்றுகின்ற இழிவான எண்ணங்களால்தான். எனவே இதனை நீங்கள் எல்லோரும் நன்றாக மனதில் நிலை நிறுத்தி வைத்துக்கொள்ள வேண்டும். புத்தபகவான் உபதேசித்தார் “மனிதனானவன் அவனது மனம் மாசடைவதால்தான் அழிந்து போகிறான். அதேபோல் மனிதன் தூய்மையடைவதும் மனம் தூய்மையடைவதாலே.”என்று.

**முன்னேற்றத்தை நற்பண்புகளினாலயே மதிப்பிட வேண்டும்.**

அப்படியானால், ஒருவருடைய அபிவிருத்தியை, முன்னேற்றத்தை அவர் பயணிக்கும் வாகனத்தைக் கொண்டு அளந்துவிட முடியாது. அவர் அள்ளிவீசும் பணத்தைக் கொண்டு அவரது வளர்ச்சியை அளந்துவிட முடியாது. அவ்வாறே அவரது புற உருவத்தால் அவரது முன்னேற்றத்தை அளந்துவிட முடியாது. அதுபோலவே ஒருவருடைய வளர்ச்சியை அளப்பது பேச்சினால் அல்ல. அவரது உடல் வலிமையால் அல்ல. ஒருவரது அபிவிருத்தியை அல்லது முன்னேற்றத்தை அவர் தமது வாழ்க்கையை கட்டியெழுப்பியுள்ள நற்குணங்களை கொண்டு தான் நாம் அளவிட வேண்டும். அதனால்தான் புத்த பகவானின் தர்மம் ஏனையவற்றிலிருந்து வேறுபடுகிறது. மனித நேயங்களுக்கும் நற்குணங்களுக்கும் முதலிடம் தந்த, மனித நேயங்களை கொண்டு மனிதனின் முன்னேற்றத்தை அளக்கும் தர்மம்தான் புத்தபகவானது ஆரிய தர்மமாகும்.

குரோத உள்ளம் படைத்த மனிதனானவன் தனது உள்ளத்தில் உருவாகும் குரோதம் காரணமாகவே அழிந்து போவதை பாருங்கள்.தனக்கு எவ்வளவுதான் வசதிகளும் செல்வமும் வந்து சேர்ந்தாலும் அவற்றை அனுபவிப்பதற்கு

அவர்களது உள்ளம் இடமளிப்பதில்லை குரோதத்தின் விளைவுகள் காரணமாக அவர்கள் மிகவும் கடினமாக உழைக்கும் எல்லாச்செல்வங்களும் அழிந்துபோகிறது. அப்படி இல்லாவிட்டால் அவை இன்னுமொருவருக்கு சொந்தமாகிவிடும். எவ்வளவுதான் செல்வமிருந்தாலும் அவர்களுக்கு மனநிம்மதியோடு மகிழ்ச்சியோடு இருக்கும் சந்தர்ப்பங்கள் அரிதாகவே கிடைக்கிறது. குரோத குணம் படைத்தவனுக்கு வந்து சேரும் நான்காவது பலன் இதுதான்.

## அடுத்தவரது கீர்த்தியை கண்டு வெதும்புகிறார்கள்

அடுத்ததாக புத்த பகவான் சுட்டிக்காட்டுவது என்னவென்றால் யாரேனும் ஒரு ஆணோ அல்லது பெண்ணோ தனது கோபக்காரனைப்பார்த்து “இவனுக்கென்றால் கீர்த்தியும் புகழும் ஒருபோதும் கிடைக்கக்கூடாது” என விரும்புவது. அவர் ஆசைப்படுவது தனது எதிரி அவமானப்படுவதை பார்க்கவே! இவை தான் குரோதத்தை தனது வாழ்வில் அரவணைத்து வாழும் உள்ளங்களின் இலட்சணங்கள். தான் வெறுக்கும் தனது கோபக்காரரது பெயர் பிரபலமாக பரவினால், இதை இவரால் பொருத்துக் கொள்ள முடியாது. யாராவது தன் எதிரியை பற்றி நல்லதாய் பேசும் போது “சரி சரி போதும்! போதும்! இவனுடைய வண்டவாளங்கள் எனக்கு தானே தெரியும் இதைக்கொஞ்சம் கேட்டுகொள்ளுங்களேன்” என்று அவரை பற்றி கேவலமாக இல்லாததையும் பொல்லாததையும் கூறத்தொடங்குவார்கள். இதுவே குரோத குணலட்சணம். புத்த பெருமான் இவ்வாறு குறிப்பிட்டார். “குரோதகுணம் கொண்ட ஒரு நபர் பற்றி இதுவரை ஏதேனும் கீர்த்தியும் பாராட்டும் சமூகத்தில் உருவாகியிருந்தால் குரோத குணத்தின் விளைவாக அந்த பெருமையெல்லாம் அற்றுபோகும். அத்தோடு அவர் பற்றியதான ஒரு அபகீர்த்தி சமுதாயத்தில் உருவாகி அது பரவும்”. என்று. பாருங்கள், இந்த தீய குணங்களின் விளைவுகள் எப்படியானதென்று.

### எதிரி தனிமையாவதை பார்க்கவே ஆசை..

ஆறாவது விடயமாக புத்தபகவான் இவ்வாறு மொழிந்தார். குரோதம் மிக்க ஒரு பெண்ணோ அல்லது ஆணோ தமது கோபக்காரனை பற்றி இவ்வாறு நினைக்கிறார். "உற்றார் உறவினர் ஒருவருமில்லாமல் இவன் தன்னந்தனியாக ஆகிவிடவேண்டும்" என்று, அதேபோல் எவருடனாவது பேசிகொண்டிருக்கும் போது தனது கோபக்காரனைபற்றி நினைவுபடுத்தி "பொய்யென்றால் பாருங்களேன் நான் சொல்வதை, அவர்களுக்கென்றால் இறுதி காலத்தில் தண்ணீர் கொஞ்சம் கொடுக்க கூட யாருமே எஞ்ச மாட்டார்கள். இவருக்கெல்லாம் யாரும் இல்லாத அநாதைகள் போலதான் சாவு வரும்" என்று சொல்லுவார். இப்படி சொல்பவர்கள் நம் சமுதாயத்தில் இல்லையா? இருக்கிறார்கள். "கேட்டு கொள்ளுங்கள் நான் சொல்வதை, நான் சொல்லவில்லை என்று சொல்ல வேண்டாம்". என்று சொல்லிச்சொல்லி தனது கோபக்காரரை பற்றி சோதிடம் கூறுவது போல வெதும்புவார்கள். இப்படி அவர் கூறக்காரணம் என்ன? தன் கோபக்காரன் சுற்றத்தாரோடு வாழ்வதை காண சகிக்கமுடியாமையே. அவர் தனது எதிரி யாருமற்ற அநாதையாய் தனித்திருப்பதை காணவே விரும்புகிறார்.

### ஏனையோருக்காக வெட்டிய குழியினுள் தானே விழ நேரிடும்

புத்த பகவான் மொழிந்தார். குரோத குணத்தின் விளைவாக 'எவன் குரோதத்தை மனதில் வளர்க்கின்றானோ அவன் தான் யாரும் அற்ற அநாதை போல தவிப்பான்' என்று. அவன் விரும்புவதோ தனது எதிரி யாருமில்லாதவனாக தனித்து விடுவதை காணவே. ஆனால் கடைசியில் அவன்தான் யாருமற்ற ஒரு அநாதைபோல தனித்துவிட நேருகிறது. இந்த காரணிகளால் எமக்கு தெளிவாக புலப்படுவது என்னவென்றால் குரோதத்திற்கு அடிமையாகி "அவனுக்கு இப்படியாகட்டும், அப்படியாகட்டும். பாருங்கள், அவனுக்கு என்ன நடக்கபோகிறது

என்று” என்று சொல்லிச்சொல்லி அந்த கோபக்காரனை வசைபாடுவதாக இருந்தால், அவனது அழிவை விரும்புவதாக இருந்தால், அவன் சீரழிவதை காண ஆவலாக இருந்தால், முதலில் சீரழிவது அவ்வாறு நினைக்கும் நாம் தான். மற்றவரது அழிவை நாம் விரும்பி போனால் அதற்கு முதலிலேயே நாம் தான் அழிவை எதிர்நோக்குவோம். ஆகவே குரோத குணத்தை தூரத்தே தள்ளிவிட வேண்டும்.

**ஏனையோருக்கு நரகத்தை பிரார்த்தித்து தான் சுவர்க்கம் செல்ல முடியாது.**

அடுத்ததாக புத்தபகவான் இவ்வாறு மொழிகின்றார். குரோதம் மிக்க ஒரு பெண்ணோ அல்லது ஆணோ தமது கோபக்காரர்களை பார்த்து இவ்வாறு நினைக்கிறார். இவர்கள் இறந்த பின்பு நரகத்துக்கு தான் போக வேண்டும். நற்பிறவியெடுக்கவே கூடாது என்று. ஆம். தன் கோபக்காரர்களை இவ்வாறு நினைப்போர் எத்தனையோ பேர் எம் மத்தியில் உள்ளனர். ஆனால் ஒருவர் இப்படி சொல்லலாம். “ஒருவர் இம்மாதிரியான பாவம் நிறைந்த வாழ்வை நடத்துகிறார். இவர் இதனை தொடர்ந்தும் செய்வாராயின் இதன் விளைவாக நரகத்தில்தான் மறுபிறவியெடுப்பார். இதனிலிருந்து தவிர்த்து வாழ்வாராயின் சுவர்க்கத்தில் பிறப்பார்“ என்று. இவ்வாறு கூறுவது கோபத்திற்காக அல்ல. புத்த பகவானும் மனம், வாக்கு, காயம் என்பவற்றினூடாக தீய செயல்களில் ஈடுபடுபவரை பார்த்து இவ்வாறுதான் கூறுகிறார். இவர் இம்மாதிரியான பாவம் நிறைந்த வாழ்வை தொடர்ந்தும் வாழ்வாராயின் நரகத்தில்தான் மறுபிறவியெடுப்பார். இதனை தவிர்த்து வாழ்வாராயின் சுவர்க்கத்தில் பிறக்க முடியும். இந்த இடத்தில் புத்தபகவான் குறிப்பிடுவது என்னவெனில் ஒருவர் குரோதத்திற்கு அடிமையான மனத்துடன் தனது கோபக்காரர்கள் நரகத்தில் பிறப்பதை விரும்புகிறார்கள். அவர்கள் தர்மத்தின்படி வாழ்ந்து சுவர்க்கத்தில் பிறவியெடுப்பதை விரும்பவில்லை. கோபத்தால் மனத்தை நிறைத்து கொண்டு தன் எதிரிகளை பற்றி நினைத்து நினைத்து “இவனென்றால் சுவர்க்கத்தில்

பிறக்க கூடாது நரகத்தில் பிறந்து துன்பப்படவேண்டும்” என வேண்டுகிறார்கள்.

## தோன்றியவுடன் அழித்துவிடுங்கள்

இவ்வாறு குரோத குணத்திற்கு அடிமையாகி தனது எதிரிக்கு கெட்டவையே விளைய வேண்டும், என எண்ணுபவன் இக்குணத்தின் காரணமாக தீய சொற்களை பாவித்து பாவத்தை சேகரித்து கொள்கிறான், எனவும் புத்தபகவான் மொழிகிறார். அவ்வாறே தனது எதிரியை பற்றி தீயதையே நினைத்து நினைத்து உள்ளத்தால் பாவத்தை நிறைத்து கொள்கிறான். அதே போல் காயத்தால் (உடம்பால்) தீமையை விளைவிக்கும் செயல்களை செய்து பாவத்தை தேடிகொள்கிறான். ஆகவே உடல் தளர்ந்து மரணமானதன் பின் அவன் நரகத்தில் பிறக்கிறான், என்றும் பகவான் மொழிகிறார். பாருங்கள், இந்த குரோதம் என்பது எவ்வளவு பயங்கரமான விடயமென்று. ஆகவே எமது உள்ளத்திலே குடிகொண்டிருக்கும் குரோதத்தை அகற்ற நாம் முயற்சி செய்ய வேண்டும். குரோதத்திற்கு இடமளித்து அதை எமது உள்ளத்தில் வளர்ச்சி பெற செய்தோமேயானால் நாமும் மரணித்து நரகத்தில் தான் பிறக்க வேண்டும். ஆகவே இது எவ்வளவு பயங்கரமானது என்று அடிக்கடி சிந்தித்து பார்க்க வேண்டும்.

## முழு வாழ்வும் அழிவதற்கு ஒருசிறு காரணம் போதும்.

உங்கள் உள்ளத்தில் எவரைப்பற்றியும் குரோதம் இல்லையென்று நாம் நினைப்போமே. ஆனால் ஒருவர் வந்து இன்னுமொருவரை பற்றி அடிக்கடி அவருடைய தீய விடயங்களையே சொல்லி கொண்டு இருந்தால் அந்த நபரை பற்றிய தவறான அபிப்பிராயம் ஒன்று உங்களுக்கு உண்டாக ஆரம்பிக்கும். இப்படியும் நடக்க வாய்ப்பு உண்டுதானே ! இப்படியான விடயங்கள் எம்மிடையே எவ்வளவோ இடம்பெறுகிறது. அதன் பிறகு

ஒருவருக்கொருவர் குரோதத்தை வளர்த்து கொண்டு நெருப்பை பரிமாரிக்கொள்கிறார்கள். குரோதத்தை உள்ளத்தில் வளர்த்து அந்த நெருப்பால் கருகிக்கொண்டு வாழ்கிறார்கள். இதனால் தம் வாழ்வையே நாசம் செய்து கொள்கின்றனர். ஒருவரையொருவர் குத்தி கொலை செய்து கொண்டு குடும்பங்களோடு அழிந்து போகின்றனர். புண்ணியவர்களே! குரோதத்தை காரணமாக கொண்டு சண்டை சச்சரவுகள் ஏற்படுத்தி கொள்ள சிலருக்கு பெரிய காரணங்கள் தேட வேண்டிய அவசியமில்லை. ஒரு சிறிய சம்பவமே போதுமானதாக இருக்கும்.

**எஞ்சிய நீரினால்..**

புத்தபகவான் வாழ்ந்திருந்த காலத்திலே கோஸம்பி நகரின் கோஸித ஆராமத்தில் மிகவும் சீலமுடைய சங்கையர் வசித்திருந்தனர். ஒரு சமயம் இந்த சீலமிகுந்த துறவிகளிடையே ஒரு துறவி மலசலகூடத்திற்கு சென்று தண்ணீரை உபயோகித்து விட்டு வெளியே வந்தார்.அவர் உபயோகித்த நீர் பாத்திரத்தில் கொஞ்சமாக நீர் எஞ்சியிருந்தது. இதனையகற்ற அவர் மறந்து விட்டார். சிறிது நேரத்தின் பின் இன்னுமொரு துறவி மலசலகூடத்திற்கு வந்தார். அந்த எஞ்சிய நீரை கண்ணுற்றார். அதனை அவர் அகற்றிவிட்டிருக்கலாம். ஆனால் இவரோ அதனை பெரிய விடயமாக கொண்டு திரும்பி வந்து “இந்த தண்ணீரை மீதமாக விட்டு வந்தவர் யார்?” என்று வினவினார். முன்பு மலசலகூடத்திற்கு சென்ற அந்த பிக்கு “என்னால் தான் அது நடந்தது. அத்தருணத்தில் வேறொரு யோசனையில் இருந்தேன். அதனால் அதை பெரிதுபடுத்தவில்லை நான் இதனை வேண்டுமென்றே செய்யவில்லை” எனக்கூறினார். ஆனால் அந்த பிக்குவோ அதனை பெரிய விடயமாக கொண்டு “இல்லை இல்லை தங்களின் கவனக்குறைவால் பெரிய தப்பு நிகழ்ந்துள்ளது.” என்று குற்றம் சுமத்தலானார். இந்த கதை கடுமையாக மாறி வாக்குவாதமாகியது. அதன் பின்னர் குற்றஞ்சுமத்தப்பட்ட அந்த பிக்கு தம் சக பிக்குமாரிடம் சென்று

“இது சரியான கதையாகவல்லவா இருக்கிறது. தண்ணீர் கொஞ்சம் எஞ்சிவிட்டதற்கு சண்டைக்கல்லவோ வருகிறார். நான் அதனை வேண்டுமென்றே செய்யவில்லை. பெரிதுபடுத்தும் அளவிற்கான குற்றம் அல்லவே இது, இதற்கு இப்படியா?” என்று சொல்ல அவரின்பாலிருந்த சக பிக்குமார்களுக்கு மிகுந்த கோபம் ஏற்பட்டு அந்த பிக்குவை தூற்றினர்.

**அசத்புருஷன் வாயில் கோடரியுடனே பிறக்கிறான்..**

பாருங்கள், இந்த சிறு விடயங்கள் குரோதம் காரணமாக எவ்வளவு மோசமான விளைவுகளை தருகின்றன என்று. இப்பிரச்சினை ஏன் ஏற்பட்டது? மலசலகூட வாளியில் கொஞ்சம் நீர் எஞ்சியிருந்ததே. இந்த விடயம் பெரும் பிரச்சினையாக மாறியது ஆச்சிரமத்தின் பிக்குகள் இருபிரிவுகளாக பிரிந்துவிட்டனர். அத்துடன் ஒருவரையொருவர் காணும் சந்தர்பங்களில் ஏசிக்கொள்ளும் அளவிற்கு இப்பிரச்சினை நீண்டுவிட்டது. பாருங்கள் விழிப்புணர்வு நிலையில் இருத்தல் எனும் சதிபட்டான நிலையில் அவர்கள் இல்லாததால் ஒரு சிறிய விடயத்தை காரணமாக கொண்டு மனதில் கிலேசம் வளர்ந்து எவ்வளவு மோசமான நிலைக்கு ஆளானார்களென்று.

**அருகே பார்க்காமல் தூரத்தே பாருங்கள்**

இறுதியில் புத்த பகவான் இந்த பிக்குகளை அழைத்து “தீகிதீ கோஸல” எனும் முற்பிறப்பு கதையை உபதேசித்தார். பிக்குகளே! நீங்கள் “அருகே பார்க்காமல் தூரத்தே பார்க்க வேண்டும் குரோதத்தை பகைமையை தூரத்தே விட்டொழியுங்கள்” என்று அறிவு பகன்றார். ஆனால் அந்த பிக்குக்கூட்டத்தார் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. நாவுக்கட்டுப்பாடற்ற ஒரு பிக்கு புத்த பகவானருகில் வந்து “பாக்கியமுள்ளவரே! இந்தக்கலவரம் காரணமாகத்தானே இங்கிருக்கும் இம்மக்கள் எம்மை பற்றி அறிந்துகொண்டார்கள்.

இதனால் நாம் பிரபலம் அடைந்துள்ளோம். எனவே நாம் இந்த கலவரத்தை தொடர்ந்தும் நடத்திக்கொண்டு போவோம். தாங்கள் ஓய்வெடுத்து கொள்ளுங்கள்." என்று கூறினார்.அப்போது புத்த பகவான், "கெட்டவன் பிறக்கும் போதே வாயில் கோடரியை கொண்டு பிறக்கிறான். இந்தக் கோடரியினாலயே அவன் நாசம் ஆகின்றான்" என பொருள்படும் அழகானதோர் செய்யுளை உரைத்தவாறு உணவு பாத்திரத்தை கையிலேந்தியபடி பாரிலெய்ய வனத்தை நோக்கி புறப்பட்டார்.

## சுந்தரமான தனிமையை மிருகங்களும் விரும்பின

அந்த வனத்திலே பாரிலெய்ய யானையுட்பட இன்னும் சில மிருகங்கள் புத்தபகவானுக்கு அக்காலத்தில் பணிவிடை செய்தன. இந்த பாரிலெய்ய யானை கூட தனித்திருப்பதின் சிறப்பை உயர்வாக எண்ணியதொன்றாகும். கூட்டத்தோடு இருக்கும்போது ஏனைய யானைகள் வந்து இடித்துகொண்டு இருக்கும். குளத்தில் குளித்துவிட்டு கரைக்கு வந்த பிறகு பெண் யானைகள் மீண்டும் குளத்திற்கு தள்ளிவிடுகின்றன. அதனால் இந்த யானை யோசித்தது, "இந்த கூச்சல் நிறைந்த கூட்டத்தில் இருந்து அகன்று தனித்து வாழ்வது எவ்வளவு நல்லம்.." என்று. புத்த பகவான் அன்று பிக்குமார்களிடமிருந்து அகன்று பாரிலெய்ய வனத்தில் தனித்திருந்த போது இந்த யானைதான் புத்த பகவானுக்கு பணிவிடை செய்தது.

## ஒற்றுமை இல்லாவிடில் தானம் இல்லை.

இனி இந்த கோஸித ஆராமத்திலிருந்த பிக்குகள் இரு கட்சிகளாக பிரிந்து கலவரத்தை தொடர்ந்தும் நடத்தி கொண்டிருக்கும் தருணத்தில், அவர்களுக்கு தானம் வழங்கும் உபாசகர்களும் தாயகர்களும்* ஒன்று கூடி "இந்த பிக்குமார்கள் கலவரத்தை நிறுத்தி கொள்வதாக இல்லை. புத்தபகவான் கூட இவர்களை விட்டுச்சென்றுவிட்டார். இவர்களுக்கு நல்லதோர் பாடத்தை

*.புத்த பகவானை முதன்மையாக கொண்ட சங்கையருக்கு பணிவிடை செய்வோர். அன்னம், சீவரம், ஔடதம், உறையுள் என்பன சங்கையருக்காக தானம் அளிப்பவர்கள்

புகட்ட வேண்டும்” எனத்தீர்மானித்தனர். இந்த பிக்குமார்கள் தம்முடன் எவ்வளவு நேசமாக இருந்தாலும் அவர்களது கட்சிகளில் சேராது தர்மத்தின் வழியில் நிற்களாயினர். இந்த முடிவெடுத்த கிராமத்தவர்கள் “இன்றிலிருந்து நாம் உங்களுக்கு அன்னதானம் வழங்க மாட்டோம். தாங்கள் இரு சாராரும் சமாதானமாகி ஒற்றுமையுடன் புத்தபகவானிடம் சென்று பகவானிடம் மன்னிப்பு கோரிவிட்டு வரவேண்டும். அப்படி வந்தால் தான் இனிமேல் நாம் தாங்களுக்கு அன்னதானம் வழங்குவோம்” என கூறினர். ஓரிரு நாட்கள் கழிந்தன. பசி தாங்க முடியவில்லை. அதன் பிறகு  தாமாகவே அவர்களின் பாதங்கள் பாரிலெய்ய வனத்தை நோக்கி புறப்பபட்டன. பாருங்கள், உபசாரங்கள் குறையும் போது தானாகவே கண்கள் திறக்கும் விதத்தை. பின்னர் பிக்கு கூட்டமே பகவானை அணுகி மன்னிப்பு கோரலாயினர். பாருங்கள் எப்படி இந்த சின்னஞ்சிறு விடயம் பெரும் கலவரமாக மாறியது என்று.

## துன்பத்திற்கான மூன்று காரணிகள்

கோசலை தேசத்து மன்னனான கோசல மன்னன் புத்த பகவானிடம் “சுவாமியே பாக்கியமுள்ள பகவானே! ஒரு மனிதனுடைய வாழ்க்கையிலே துக்கத்திற்கு ஏதுவான காரணிகளாக இருப்பவை யாவை?” என வினவுகிறார். அத்தருணத்தில் புத்தபகவான் இவ்வாறு மொழிகிறார், “மனிதனது வாழ்வில் துக்கத்திற்கு ஏதுவாக மூன்று காரணிகள் இருக்கிறது. அவைதான் ஆசை, கோபம், அறியாமை எனும் மூன்றுமாகும்”

## ஆபத்துக்கள்

அப்படியென்றால் எவருடைய வாழ்விலாவது ஆசை, கோபம், அறியாமை எனும் மூன்றும் இருக்குமாயின் அவருடைய வாழ்க்கைக்கு பெரியதொரு ஆபத்து உள்ளது. அதுபோல்

எவரின் வாழ்விலாவது ஆசை கோபம், அறியாமை எனும் மூன்றும் இல்லாதொழியுமாயின் அதன் பொருள் அவர் அனைத்து துன்பங்களிருந்தும் விடுபட்டார் என்பதாகும். அப்படியென்றால் பாருங்கள் எமது உள்ளத்திலே ஏற்படும் குரோதகுணமானது எம்மை முற்றாகவே தார்மீக வழியிலிருந்து எம்மை அப்புறப்படுத்துகிறது என்பதை. உள்ளத்திலே குரோதம் உருவானதன் பின் அதை மீண்டும் மீண்டும் சினம் கொண்ட மனத்துடன் நினைக்க நினைக்க இன்னுமின்னும் குரோதம் வளர்ச்சியடையுமே தவிர குறையாது. ஈற்றிலே பழிவாங்கும் படலத்தில் தான் அது போய் முடிவடைகிறது. அதில் தான் இன்பமடைகின்றனர். சிலர் இந்தக்குரோதம் காரணமாக பழிவாங்குதலில் ஈடுபட்டு இன்னுமின்னும் குரோதத்தை வளர்த்து கொண்டு பல எண்ணிலடங்கா பிறவிகளில் தொடர்ந்து கொண்டு சம்சார சக்கரத்தில் உழன்றுகொண்டிருக்கின்றனர். நீங்கள் கேட்டிருப்பீர்கள், 'தம்ம பதம்' எனும் புனித நூலை பற்றி அதிலே புத்த பகவானின் குரோதம் தொடர்பான அழகானதொரு செய்யுளொன்று உள்ளது. அதில் புத்தபகவான் :

**நஹீ வேரேன வேரானி சம்மன்தீத குதாச்சனங்**

**அவேரேண ச சம்மன்தீ ஏஸ தம்மோ சனந்தனோ**

பகைமையால் ஒரு போதும் பகைமையை தணிக்க முடியாது. அன்பினால் தான் பகைமையை தணிக்க முடியும். பகைமை பாராட்டாத போது பகைமை தணியும், என்பது இவ்வுலகத்தில் நிலவி வரும் மாறாத தர்மமாகும். என மொழிந்துள்ளார்.

உங்கள் உள்ளங்களில் என்றாவது ஒருநாள் கோபம், பகைமை என்பன உண்டாகினால் நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டிய விடயம் யாதெனில் பகைமையினால் ஒரு போதும் பகைமையை தணிக்க முடியாது. பகைமை பாராட்டாமல்தான்,

தன் மனதில் தோன்றிய கோபத்தை, குரோதத்தை தணிக்க முடியும் என்பதாகும்.

**குரோதத்தின் விளைவுகளை ஞாபகப்படுத்திகொண்டால் எல்லாம் சரியாகும்**

சித்தத்தில் ஏற்பட்ட பகைமையை இல்லாதொழிக்க நரகத்தை பற்றிய பயத்தை ஏற்படுத்திகொள்வதே சிறந்ததாகும். உள்ளத்தில் கோபம் ஏற்பட்ட பின்னர் நாம் இவ்வாறு சிந்திக்க வேண்டும் "இந்த குரோதத்தை அடிப்படையாக கொண்டு நான் நரகலோகத்தில் எத்தனை முறை பிறந்திருப்பேன் ? குரோதகுணம் காரணமாக நான் எத்தனை முறை மிருகலோகத்தில் மிருகங்களாக பிறந்திருப்பேன்? எத்தனை முறை பிரேதலோகத்தில் பிரேத ஆத்மாவாய் பிறந்திருப்பேன்? என்று நரகங்கள் பற்றிய பீதியை நினைத்து பார்க்கும் போது இந்த குரோதமானதன் அழிவை பற்றி உணர்ந்து கொள்ள முடிகிறது.

இந்த குரோதத்தை நாம் வாழ்வில் பழக்கப்படுத்தி கொள்ளும் போது அதன் விளைவாக "புத்த சாஸனமும் மனித வாழ்வும் ஒன்றிணைந்த இந்த மிக அரிதான சந்தர்ப்பத்திலே, தர்மத்தை உய்த்துணரும் சந்தர்ப்பத்தை நாம் இழந்து விடுகின்றோமே" என்று நினைத்து பார்க்க வேண்டும். அப்படிச்செய்தால் இந்த குரோத குணத்திலிருந்து விடுதலை பெறக்கூடிய ஆற்றலை குரோதத்திற்கு எதிராக இயங்கக்கூடிய பலத்தை எம் வாழ்வில் உருவாக்கிக்கொள்ள முடியும்.

**இப்படியானவர்களும் இருந்திருக்கிறார்கள்.**

புத்த பகவான் வாழ்ந்திருந்த காலத்திலே முடி வெட்டும் தொழிலை செய்த ஒருவர், இல்லற வாழ்வை துறந்து தனது இரு மகன்மாரோடு துறவறம் பூண்டார். இவர்களுக்கு தாங்கள் வாழும் பிரதேசத்திற்கு புத்த பகவான் எழுந்தருளுகிறார், என அறியக்கிடைத்தது. இந்த முடிவெட்டுபவர்க்கு மாத்திரம்

அல்லாது அவரது இரு மகன்மார்களுக்கும் கூட முடிவெட்டும் தொழில் நன்கு தெரிந்திருந்தது. எனவே தாங்கள் நன்கறிந்த முடிவெட்டும் தொழிலை செய்து கொஞ்சம் பணத்தை சேகரித்து கொண்டு புத்த பிரானுக்கு அன்னதானம் வழங்க தீர்மானித்தனர். இதன் படி இந்த மூன்று பிக்குகள்ளும் முடிவெட்ட தேவைப்படும் உபகரணங்களை எடுத்து கொண்டு மனிதர்களது முடியை வெட்டி அதில் கிடைக்கும் பணத்தை கொண்டு அன்னதானத்திற்கான பொருட்களை சேகரிக்க தொடங்கினர். இவ்வாறு துறவறம் பூண்ட பிக்குகள்ளுக்கு, உசிதமற்ற செயலை இவர்கள் செய்தனர். அந்த பிரதேசத்தில் வாழ்ந்த மக்களும் இவர்களுக்கு பெரிதும் உதவினர். இந்த பிக்குகள்ள் தாம் சேர்த்த பொருளை கொண்டு புத்தபிரானுக்கு வழங்குவதற்கு கூழ் ஒன்றை தயாரிக்களாயினர்.

### இப்படி கூறியது அன்புக்காகத்தான்

இவ்வாறு இருக்கும்போது புத்த பகவான் தம் சீடர்களுடன் அப்பிரதேசத்திலுள்ள ஆச்சிரமத்திற்கு வருகை தந்தார். அத்தருணத்தில் அந்த மூன்று பிக்குகளும் புத்த பகவானுக்கு அந்த கூழை தானம் செய்தனர். ஆனால் புத்த பகவான் அதனை ஏற்கவில்லை. அதற்கு முன் அவர்களை நோக்கி “புண்ணியவர்களே! இந்தக்கூழை நீங்கள் எவ்வாறு தயார் செய்தீர்கள்?” என வினவினார். அதற்கு அவர்கள் “பகவானே இப்படித்தான் தயார் செய்தோம்”என முழு விபரத்தை யும் கூறலாயினர். இதனை செவிமடுத்த புத்த பகவான் “ நீங்கள் இவ்வாறு செய்தது பிக்குகளுக்கு பொருந்தாததாகும். நீங்கள் செய்திருப்பது பிக்குகள் அல்லாதவர்கள் மேற்கொள்ளும் செயல்களாகும்”. எனக்கூறி அந்த கூழை ஏற்க மறுத்தார்.

இந்த பிக்குமார்கள் இதனை மனத்தில் இருத்தி கொண்டு புத்த பகவான் மீது குரோதத்தை வளர்த்து கொண்டனர். அப்படியானால் அவர்கள் துறவறம் பூண்டாலும் கூட அந்த

பிக்குகள்ளின் உள்ளங்கள் பக்குவப்பட்டிருக்கவில்லை. என்பது வெளிப்படுகிறது அல்லவா? 'சுபத்தர' எனும் அந்த பிக்குதான் புத்த பகவான் பரிணிர்வாணம் அடையும் போது ஆயிரக்கணக்காணோர் துயரம் தாழாது புலம்பும் போது அந்தக்கூட்டத்தின் நடுவே சென்று பெறும் சத்தத்தோடு "நீங்கள் அழவேண்டியதில்லை. நாங்கள் இப்போது பெரும் கட்டுப்பாட்டிலிருந்து மீண்டுவிட்டோம். இப்போது எங்களுக்கு நிம்மதியாக எம் கருமங்களை செய்து கொண்டிருக்கலாம். உங்களுக்கு 'இது சரி', 'இது பிழை' என கூற ஒருவரும் இல்லை. இப்போது தான் எமக்கு நிம்மதி மற்றும் சுதந்திரம் கிடைத்தது" என கூச்சலிட்டது இந்த பிக்குதான். இந்த செய்தியானது அங்கிருந்த 'மஹா காசியப்ப' எனும் அரஹத் தேரர் அவர்களின் செவியில் விழுந்தது. இந்த சம்பவத்தை அடிப்படையாக கொண்டுதான் மஹா காசியப்ப தேரரின் தலைமையில் அரஹத் தேரர்கள் ஒன்று கூடி தர்மசங்கீதியத்தை நிகழ்த்தினர். இதிலிருந்து எமக்கு தெளிவாக புலப்படுவது என்னவென்றால் உள்ளத்திலுள்ள குரோதத்தை அகற்றிவிடாமல் அதன் வளர்ச்சிக்கு தாராளமாக இடமளித்து அதனை முதிர்ச்சியடையச்செய்து எத்தனை பேர் தத்தம் வாழ்வினை அழிவுக்கு இட்டுச்செல்கின்றனர் என்பதாகும்.

## அடக்கத்துடன் நடந்து கொண்டால் எல்லாம் சரியாகிவிடுமே

அடுத்ததாக உள்ளத்தில் தோன்றும் குரோதத்தை அழிக்க இன்னுமொரு முறை உண்டு. அதுதான் அடக்கம். இறுமாப்பின்றி அடக்கத்தோடு ஒருவர் செயற்பட்டால் அவர் ஒருபோதும் ஏனையோரை பகைத்துகொண்டு கோபித்து கொண்டு காலம் கடத்த மாட்டார். அவர் விரைவாகவே பகைமையை, கோபத்தை மறக்க முயற்சி செய்வார். அதேபோல் அதனை மனதில் தேக்கி வைத்து கொள்ளாது மறந்தும் விடுவார். "நான் ஏன் யாரையும் பகைத்து கொண்டு கோபம் பாராட்ட வேண்டும்?" என அவர் நினைப்பார். அவ்வாறில்லாது அகங்காரம் கொண்ட

தற்பெருமை மிகுந்த ஒருவரை பற்றி நினைத்து பார்ப்போம். "இவனெல்லாம் என்னைபோன்ற ஒருவருக்கு பேசும் விதமா இது? இவனுக்கெல்லாம் என்ன தைரியம் இருக்கிறது என்னை பற்றி பேச. நான் யாரென்று நினைத்து கொண்டு இப்படி பேசுகிறான்கள்.." என்று நினைப்பார். இவ்வாறானவர்களது மனங்களில் பகைமையானது உடனே முளைத்து விடுகிறது. இந்த பகைமையுணர்வானது மேலும் மேலும் வளர்ந்துவிடுகிறது. எனவே அடக்கத்துடன் பணிவுடன் இருந்தால் பகைமையை அழித்தொழிக்கவும் கோபத்தை அடக்கியொடுக்கவும் முடியும்.

அடுத்ததாக கோபத்தை அடக்கியொடுக்க இன்னொரு வழியும் உள்ளது. அதுதான் மரணத்தை எண்ணிச்செய்யும் தியானம். ஒருவர், "நான் மற்றவர்களுடன் பகைமையை வளர்த்து கொண்டு அந்த பகைமை எண்ணத்துடன் இருக்கும்போது உயிர் நீத்து விட்டால் அக்கணமே நான் நரகத்தில்தான் பிறக்கவேண்டும், ஆகவே மற்றவர்கள் மீது பகைமையை வளர்த்து கொள்வதானது, எனக்குதான் பெரும் நட்டம். எனவே இந்த கோப உணர்வினை நான் இல்லாதொழிக்க வேண்டும். என்னைவிட உயர்ந்த, அதிகாரமிக்க, கீர்த்திமிக்க, செல்வந்தர்கள் போன்றோரெல்லாம் மரணத்தை தழுவுகிறார்கள். நானும் எந்நேரத்திலாவது மரணிக்க நேரும், அப்போது பகைமையுள்ளத்தோடு நான் மரணித்தால் அது எனக்கு பெரும் ஆபத்தாகும். எனவே இக்கீழ்த்தரமான பகைமை குணத்தை விட்டொழித்து மைத்ரீ (ஜீவகாருண்ய) உள்ளத்தை உருவாக்கி கொள்ள வேண்டும்".என்று மரணத்தை பற்றி நினைத்து பகைமையை மறந்து உள்ளத்தை தூய்மை படுத்திக்கொள்ள வேண்டும்.

**நிலையில்லாமையை உணர்வோருக்கு இதனை வெற்றிகொள்ள முடியும்**.

குரோதத்தை நீக்கிக்கொள்வதற்கான இன்னுமொரு முறைதான் நிலையில்லாமையை நினைவுகூறுதல்

“அனைத்தும் நிலையற்றன அல்லவா? எல்லாமே அழிந்தொழிந்து போகும் இயல்பினை கொண்டதல்லவா? இம்மாதிரியான நிலையில்லாதவையை அடிப்படையாக கொண்டு தானே நான் ஏனையோருடன் குரோதத்தை ஏற்படுத்திகொண்டிருக்கிறேன். நிலையில்லாத உலகில் நானும் நிலையில்லாத ஒரு வாழ்வை தானே வாழ்ந்து கொண்டிருக்கிறேன் ஆகவே குரோதம், கோபம், பகைமை எனும் பொல்லாத கொடிய விடயங்களிலிருந்து மீள வேண்டும்”. என நினைப்பது சிறந்த விடயமாகும்.

இவ்வாறு நினைத்தும் கோபத்தை வெல்ல முடியாதவர்கள் இப்படி நினைக்க வேண்டும். “உலகமக்களால் பெரியோர்கள் என போற்றப்பட்ட பலர் தோன்றியிருக்கின்றனர். அந்த உத்தம மனிதர்கள் தன் உள்ளத்தே உருவான குரோதத்தை கண்ணுற்று அவற்றை இழிவுபடுத்தினர். அதனை தூரத்தே ஒதுக்கினர். கட்டுப்படுத்தினர். எனவே குரோதத்தை அகற்றிவிடுவதுதான் உன்னதமானது. இதனை உயர் உள்ளம் கொண்ட பெரியோர்கள் ஆதரித்தனர். நற்குணங்களை வளர்க்க முயற்சிக்கும் நான், கோபம் போன்ற எண்ணங்களுக்கு இடமளிப்பது பொருந்தாது. எனவே, கேவலமான இழிகுணங்களிலிருந்து நான் நீங்கிவிட வேண்டும்.” என்று இப்படி நினைத்தாவது குரோதத்தை நீக்கிகொள்ள முயற்சிக்க வேண்டும்.

## குறைந்தது இப்படியாவது செய்து பாருங்கள்

அவ்வாறு இல்லாவிட்டால் குறைந்தது இப்படியாவது சிந்திக்க முயற்சிக்க வேண்டும். “இந்த கோபத்துக்கும் குரோதத்துக்கும் இடமளித்ததால்தான் இந்த உலக மக்கள் சகல நற்குணங்களையும் இழந்து ஈனர்களாக மாறினர். இந்த குரோதத்தை அடிப்படையாக கொண்டு பெரும்பாலானோர் தமது சொத்து சுகங்களை இழந்தனர். குரோதத்திற்கு தமது உள்ளத்தில் இடமளித்த எவருமே சுகமாக உறங்கியதில்லை. குரோதம் காரணமாகவே அந்த

மனிதர்கள் அவலட்சணமாகிறார்கள். ஏதேனும் புகழை அவர்கள் பெற்றிருந்தாலும் குரோதத்துடன் செய்யும் காரியங்களால் மக்களிடையே மதிப்பிழக்கின்றனர். இந்த இழிகுணத்தால் பகைமை கொண்டு மரணித்தவர்கள் நரகத்தில் பிறக்கின்றனர். எனவே நான் என் மனத்தில் குரோதத்திற்கும் பகைமைக்கும் இடமளிக்கமாட்டேன். முழுமையாகவே இந்த இழிகுணத்தை அழிக்கவேண்டும்" என்றாவது சிந்திக்க முயலுதல் வேண்டும்.

நான் உங்களுக்கு சிறிய உதாரணம் ஒன்று சொல்கிறேன். ஒரு அபாயகரமான பாம்பு குட்டியை ஒரு கூட்டுக்குள் வைத்திருப்பதாக நினைப்போம். இந்த பயங்கரமான பாம்புக்குட்டிக்கு எந்நேரமும் நன்றாக உண்ண குடிக்க கொடுத்தால் என்ன நடக்கும்? அந்த பாம்பு குட்டியானது நாளுக்கு நாள் பலம் மிக்கதாக மேலும் மேலும் விடம் நிறைந்த பயங்கரமான பாம்பாக வளர்ச்சியடையும். யாராலும் அடக்க முடியாத படி அது சக்திமிக்கதாக, பயங்கரமானதாக மாறும். ஆனால் அதே குட்டி பாம்புக்கு உண்ண குடிக்க கொடுக்காமல் இருந்தால் அது நாளுக்கு நாள் மெல்ல மெல்ல சக்தியிழந்து மெலிந்து மரணத்தை தழுவி விடும்.

### குரோதத்திற்கு இடமளித்தால் பாம்பு போலத்தான்.

ஆம். அது போலத்தான் உள்ளத்தே உருவாகும் குரோதத்திற்கு இடமளிக்காது, கொஞ்சம் கொஞ்சமாக தமது உள்ளத்திலிருந்து அப்புறப்படுத்த வேண்டும். இந்த வாழ்க்கையை பற்றி சன்சாரத்தை பற்றி குரோதத்தின் ஆபத்தை பற்றி நன்குணர்ந்த ஒருவர்க்கு தான் இதை செய்ய முடியும். புண்ணியமிக்கவர்ளே! நீங்கள் இந்த வாழ்க்கையில் முன்னேற விரும்பினால் ஏதாவது சந்தர்ப்பங்களில் நாம் ஏற்படுத்திகொள்ளும் சண்டை சச்சரவுகள் மற்றும் விருப்பமற்ற நிகழ்வுகள் என்பன தொடர்பாக மனத்தால் வெம்பிக்கொண்டிருக்காதீர்கள். அவற்றை உடனுக்குடன் மறந்துவிட கூடிய புத்திசாலியாக, திறமைசாலியாக நீங்கள்

இருக்கவேண்டும்.

கோபம் விளையக்கூடிய விடயங்களை உள்ளத்திலே புதைத்து வைத்திருந்து அவற்றை தொடர்ச்சியாக கொண்டு சென்றால் நான்கு வகை நரகங்களில் பிறந்து கொண்டும், எல்லா பிறவிகளிலும் பழிவாங்கிக்கொண்டும், மீண்டும் மீண்டும் சன்சார சக்கரத்திலே முடிவில்லாமல் உழன்று கொண்டிருக்கும் துர்ப்பாக்கியம்தான் கிட்டும். அதனால் எமது பகைவர்கள் மீண்டும் மீண்டும் எடுக்கும் பிறவிகளில் எம்மை சந்திப்பார்கள். இதனிலிருந்து மீள்வதாயின், அதற்கான வழி நாம் எமது பகைவர்கள் செல்லாத வழியில் செல்வதாகும். அந்தப்பாதைதான் புத்த பகவான் மொழிந்த எண்சீர்மார்க்கம் அல்லது ஆர்ய அஷ்டாங்கிக மார்க்கம். இப்பாதையில் பயணிப்பவரின் உள்ளத்தில் மைத்ரீ(அன்பு), கருணை போன்ற நற்குணங்களும், அடக்கம், பணிவு போன்ற உயர்குணங்களும் உருவாகின்றன. இந்த நற்குணங்கள் வளர்ச்சியடையும் போது அந்த மனிதர் ஒரு போதும் குரோதத்திற்கு அடிமையாகமாட்டார்கள். அவர் இந்த பிறவிபெருங்கடலிருந்து மீளும் ஒருவராகிறார்.

## கங்கையில் குதித்து இறந்து விடுவர்

புண்ணியமிக்கவர்களே! சிலசமயம் இவ்வாழ்வில் எம்மை சந்திக்கும் எம் பகைவர்கள் எம்மை பழிவாங்க சபதம் செய்தது முற்பிறவியிலாக இருக்கலாம்.பல பிறவிகள் எடுத்தும் குரோதத்தை மனதில் தேக்கி கொண்டு பழிவாங்குவதற்காக வருபவர்களும் உள்ளனர். இப்படி ஒரு கோபக்காரனை இவ்வாழ்வில் சந்தித்ததும் சிலநேரம் இருவரும் விரைவிலேயே காதலர்களாகி விடுவர். அந்த காதல் கைகூடுவதற்காக வீடுகளுக்கு சென்று உண்ணாமல் குடிக்காமல் அழத்தொடங்கிவிடுவர் “எனக்கு அவர்தான் வேண்டும். அவரையே எனக்கு மணஞ்செய்து கொடுங்கள். அவர் எனக்கு கிடைக்காவிடில் நஞ்சு குடிப்பேன் இல்லை ஆற்றில்

குதிப்பேன், எனக்கு அவர் தான் வேண்டும்" என்று கூறுவர் இறுதியில் பெற்றோர்களும் வேறு வழியின்றி திருமணம் செய்து கொடுப்பார்கள். ஒரு கிழமைதான் அதற்கு பிறகு இராட்சசனும் இராட்சசியும் போலாகிவிடுவர். ஏன்? இவ்வாறான குடும்பங்கள் இல்லையா? ஐந்து பத்து வருடங்களாக காதலித்து திருமணம் செய்து திருமணத்தின் முதல்நாளே சண்டை சச்சரவுகள் ஏற்படுத்தி கொண்டு, ஒருவரை ஒருவர் வெறுத்து கொண்டு மரணிக்கும் வரை நரக வாழ்வு வாழும் எத்தனையோ பேர் எம்மை சுற்றியே உள்ளனர்.

## எரியாத நெஞ்சங்கள்

விவேகமிக்க ஒருவரால்தான் இந்தக்குரோதத்தின் விளைவுகளை உணர்ந்து அதிலிருந்து மீள முடியும். நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். 'மாகந்தியா' எனும் அரசி தன்னோடு அந்தபுரத்தில் வாழ்ந்த சாமாவதீ எனும் அரசி மற்றும் அவளது ஐந்நுறு தோழிகளையும் புடவையால் சுற்றி உயிரோடு தீயிட்டு கொளுத்தி கொன்ற விடயத்தினை. அத்தருணத்திலே சாமாவதீ அவளது தோழிகளை பார்த்து "இந்தத்தீயினால் எமது உடல்கள் கருகி சாம்பலாகட்டும். ஆனால் எமது உள்ளங்களை தீயினால் பாதிப்படைய இடமளிக்காதீர்கள். மனத்தை தர்மத்தில் நிலைபெறச்செய்யுங்கள். எவரும் குரோத எண்ணத்திற்கு உள்ளத்தில் இடமளிக்க வேண்டாம்." என்று கூறினாள். அந்த அறிவுரையை ஏற்ற அவர்கள் அனைவரும் தம் மரணத்தருவாயில் வீடுபேறு அடையும் வழியை எய்தினர். பாருங்கள் தர்மத்தில் நிலைத்திருக்கும் அறிவாளியின் இயல்பினை. எவ்விதமான கடுமையான சந்தர்ப்பங்களிலும் கூட அதனை சிறப்பான முறையில் எதிர்நோக்கும் ஆளுமை இந்த தர்மத்தினுடாக அவருக்கு கிடைக்கிறது.

**விடாமுயற்சி இருக்குமேயானால் எங்களாலும் முடியும்.**

இந்த உள்ளத்தை கட்டுபடுத்துவது என்பது மிக மிக கடினமான செயலாகும் இச்செயலானது இவ்வுலகில் வாழ்ந்த விவேகமிக்க ஞானமிக்க மாபெரும் வீரர்களால் செய்யப்பட்டதாகும். ஆனால் நம் அனைவரும் முயற்சியும் வீரியமும் கொண்டு செயல்பட்டால் உள்ளத்தை கட்டுப்படுத்தும் ஆற்றலை பெற்றுக்கொள்ளலாம். இந்த ஆற்றலை நீங்கள் படிப்படியாக உங்கள் வாழ்வில் உண்டாக்கிக்கொள்ள வேண்டும்.

அடுத்ததுதான் உங்களுக்கு உங்களது கோபக்காரனை பற்றி அடிக்கடி நினைவு வருகிறது என நினைப்போம். இந்த எண்ணம் உங்கள் மனதில் உதித்தவுடன் அந்த பகைமையுணர்வை அழிப்பதற்காக “அவர் சுகமாக வாழ வேண்டும்” என மனத்தால் நினைக்க வேண்டும். இவ்வாறு நீங்கள் உங்கள் உள்ளத்தை பழக்கப்படுத்தி கொண்டால் காலப்போக்கில் மனதில் கோபம் ஏற்படாத வண்ணம் அதே கோபக்காரனை உங்களால் நினைக்க முடியும். அந்த திறமை உங்களுக்கு கிடைத்துவிடும்.

இந்த உள்ளத்தை கட்டுப்படுத்துவதானது, அடக்குவதானது, ஆளுதல் என்பதானது எவ்வளவு கவனமாகவும் எவ்வளவு புத்திசாலித்தனத்துடன், விழிப்புணர்வுடன், செய்யப்பட வேண்டிதொன்று என்பது இப்போது உங்களுக்கு தெளிவாகும். மிக மிக அரிதாக இவ்வுலகத்தில் அவதரிக்க கூடிய புத்தர் என்ற ஒரு மாமனிதரால் மாத்திரம் தான் பகைமை, குரோதம், கோபம், தற்பெருமை எனப்படும் இழிவானவற்றிலிருந்து எம் மனத்தை நீக்குவதற்கான, உள்ளத்தூய்மைக்கான வழியை காண்பிக்க முடியும்.

**பிறவிபெருங்கடலை பற்றி நினைத்தேயாக வேண்டும்.**

புண்ணியமிக்கவர்களே! எமது உள்ளத்தில் உருவாகும் பகைமை, குரோதம், கோபம் என்பவைகளை வெற்றிகொள்வதற்கு

இந்த பிறவியை மாத்திரம் எல்லையாக நினைக்ககூடாது. “எது நடந்தாலும் நடக்கட்டும். செத்து போனால் எல்லாம் முடிந்து விடுமே” என்று இப்பிறவியை மாத்திரம் நினைப்பவருக்கு உள்ளத்தே உருவாகும் இழிகுணங்களை அழிப்பது மிக கடினம். அடிக்கடி “நாம் அடிமுடி தெரியாத பிறவி சுழற்சியில் பிறந்துள்ளோம்” என நினைக்க வேண்டும். “நான் கர்மத்தை உரிமையாக கொண்டு, கர்மத்திற்கு அடிமையாகி, கர்மத்தை எனது உறவினராக கொண்டு, அதே கர்மத்தின் அடிப்படையில் சுக துக்கங்களை அனுபவித்து கொண்டு பிறவிக்கடலில் பயணிக்கும் ஒருவர்” என்பதனை நினைக்க வேண்டும்.

நாங்கள் இவ்வாறு நினைப்போம், நீங்கள் யாருடனாவது குரோதமாய் வாழ்ந்திருந்து மரணித்ததன் பின்னர் ஒரு மிருகமாகவோ அல்லது சர்ப்பமாகவோ மீண்டும் பிறக்கிறீர்கள். நாம் நினைப்போம். நீங்கள் ஒரு பூராணாக பிறந்தீர்கள் என்று. சிலவேளை உங்களுக்கு எதிரியாக இருந்தவரின் காலில் மிதிபட்டு கூட நீங்கள் நசுங்க கூடும். சிலவேளை நீங்கள் அந்த பிறவியிலிருந்து மரணித்து கர்மத்தினடிப்படையில் நரகத்தில் பிறக்கக்கூடும். அதிலிருந்து மீண்டு பிசாசு உலகில் பிறக்கலாம். இவ்வாறாக நான்கு நரகிலும் விழுந்து கொண்டு போகும் பயங்கரமான பிறவிச்சக்கரம்தான் தர்மத்தை உணர்ந்து கொள்ளாத மனிதனுக்கு கிட்டியிருக்கிறது.

### சோவான் நிலையை அடைவதுதான் ஒரே நிம்மதி..

என்றோ ஒரு நாளிலே ஆன்மா உண்டெனும் தவறான காட்சி (சக்காய திட்டி), தர்மத்தின் மீதுள்ள சந்தேகம் மற்றும் சீலப்பதபராமாஸ (ஒழுக்கம் என கடைபிடிக்கும் தவறான விரதங்கள்) எனும் மூன்றையும் அழித்து சோவான் நிலையையடைந்து மோட்சமடைதலின் முதற்படியை அடைந்தோமேயானால், அன்று எம்மால் நால்வகை நரகங்களிலிருந்து நிரந்தரமாகவே நீங்க முடியும். கர்மத்தினடிப்படையில் அல்லாது தர்மத்துக்கு ஏற்றபடி

வாழ்வை நெறிப்படுத்தி வாழும் போது எமக்கு மோட்சம் என்பது சேய்மையாகாது. இவ்வாறான வாழ்வை வாழ்வதற்கு எத்தணிக்கும் ஒருவர் குரோதம் போன்ற மிக மிக கீழ்தரமான விடயங்களுக்கு தம் உள்ளத்தில் இடமளிக்கமாட்டார்.

எனவே புண்ணியவர்களே! இந்த பயங்கரமான பிறவிக்கடலில் இருந்து மீள்வதற்கு அதன் ஆபத்தை நாம் உணர வேண்டும். ஆபத்தை உணரும் போதே அதனிலிருந்து விடுபட வேண்டும் எனும் எண்ணம் தோன்றும். ஆசை, கோபம், அறியாமை எனும் மன அழுக்குகளின் ஆபத்தையுணர வேண்டும். கௌதம புத்த பகவானது சாசனத்திலே உன்னதமான மோட்சத்தையடைய வேண்டும். அதற்காக இந்த தர்மத்தினை எம் வாழ்விற்கு ஒன்றிணைத்து கொள்வோம், நன்நெறிகளை உருவாக்கிகொள்வோம், எனும் திடமான சங்கற்பத்தினை எம் மனத்தில் ஏற்படுத்திகொள்ள வேண்டும்.

**சாது! சாது!! சாது!!!**

## அருஞ்சொற்கள்

01. மும்மணிகள் - புத்த பகவான், ஸ்ரீ சத்தர்மம், ஆரிய மகா சங்கத்தினர்

02. புதுஜ்ஜனர் - மும்மணிகளை சரணடையாதவர், தர்மத்தினை அறியாதவர். வாழ்க்கையின் யதார்த்தத்தை உணராதவர். இப்படிப்பட்டவர் தன் தாய் தந்தையைரை கொலை செய்வதற்கோ அல்லது அரஹத் பிக்குமாரை கொலை செய்வதற்கோ தயங்கமாட்டார். புத்த பகவான் ஒருவரது திருவுடலின் குருதியை தீய எண்ணம் கொண்டு தீண்டத்தயங்காதவர். சங்க பேதம் செய்ய தயங்காதவர். இவ்வியல்புகளை கொண்டவராக இருப்பவரே போதுஜ்ஜனர் என புத்த பகவான் மொழிந்துள்ளார்.

03. அரஹத் - ஆசை, கோபம், அறியாமை எனும் மனவழுக்குகளையும் அதன் படிவுகளையும் முற்றாக நீக்கியவர். மீண்டும் பிறவி எடுக்காத நிலையை எய்தியவர்.

04. ஆர்ய தர்மம் - புத்த பகவான் போதித்த தர்மம்

05. சதுரார்ய சத்தியங்கள் அதாவது நான்கு பேருண்மைகள்

*. துக்கம் - பிறப்பு, முதுமை, நோயுறல், மரணம், பிரியமற்றவைகளுடன் பிரியமற்ற நபர்களுடன் சேர்ந்த வாழல், பிரியமானவை மற்றும் பிரியமான நபர்களை பிரிந்து வாழல், விரும்புபவை கிடைக்காமை, சுருங்கக்கூறின் இந்த பஞ்ச உபாதானஜ்கந்தங்களும் துக்கத்திற்குரியனவே

*. துக்கத்தின் தோற்றம் : காம தண்ஹா (காமத்தின் மீதான ஆசை)

பவ தண்ஹா : மீண்டும் மீண்டும் பிறப்பதற்கான ஆசை

விபவ தண்ஹா : நிலையாதிருப்பதற்கான ஆசை

*. துக்க நிவாரணம் துக்கத்தின் அழிவு அதாவது மோட்சம்

*. துக்க நிவாரண மார்க்கம். : மோட்சத்தை அடைவதற்கான மார்க்கம் இதுவே எண்சீர் மார்க்கமாகும்.

06. மூட பார்வைகள் (திருஷ்டிக்கள்):

*. தானம் அளிப்பதில் விளைவுகள் இல்லை.

*. பூஜைகளில் விளைவுகள் இல்லை

*. சேவை மற்றும் பணிவிடை செய்வதில்

விளைவுகள் இல்லை.

*.கர்மம் மற்றும் கர்மபலன்கள் இல்லை.

*.இவ்வுலகம் என்று ஒன்றில்லை.

*.மறுவுலகம் என்று ஒன்றில்லை.

*. தாய் என்பவள் விசேடமானவள் அல்ல.

*. தந்தை என்பவர் விசேடமானவர் அல்ல.

*. தாய் தந்தை இல்லாது, முட்டையினுள் பிறவாது, ஈரலிப்பான இடத்தில் இல்லாது எடுக்கும் பிறவிகள் அதாவது ஓபபாதிக பிறப்புக்கள் உண்டு என்பதனை நம்பாதிருத்தல்

*.இவ்வுலக உண்மைகளை உய்த்துணர்ந்து ஆசை, கோபம், அறியாமை என்பன முற்றாக நீக்கிய, சாதாரண மனித தன்மையை மீறிய உத்தமர்கள் இருக்கிறார்கள்,

என்பதனை நம்பாதிருத்தல். இவையே புத்த பகவான் மூடபார்வைகளாக மொழிந்தருளியுள்ளார்.

07. புத்தபகவான் ஏற்படுத்தி கொள்ளும்படி மொழிந்த சரியான பார்வை அல்லது இலௌகீக சம்மா திட்டி:

சம்மா திட்டி அல்லது சரியான பார்வை.

*.தானம் அளிப்பதில் விளைவுகள் உண்டு

*. பூஜைகளில் விளைவுகள் உண்டு

*.சேவை, பணிவிடை செய்வதில் விளைவுகள் உண்டு

*.கர்மம் மற்றும் கர்மபலன்கள் உண்டு

*.இவ்வுலகம் என்று ஒன்றுள்ளது

*.மறுவுலகம் என்று ஒன்றுள்ளது.

*.தாய் என்பவள் விசேடமானவள்.

*.தந்தை என்பவர் விசேடமானவர்.

*.தாய் தந்தை இல்லாது, முட்டையினுள் பிறவாது, ஈரலிப்பான இடத்திலில்லாது எடுக்கும் பிறவிகள் உண்டு அதாவது ஓபபாதிக பிறப்புகள் உண்டு என்பதை ஏற்றுக்கொள்ளல்.

*.இவ்வுலக உண்மைகளை உய்த்துணர்ந்து ஆசை, கோபம், அறியாமை என்பன முற்றாக நீக்கிய, மனித தன்மையை மீறிய உத்தமர்கள் இருக்கிறார்கள் என்பதனை நம்புதல். இவையே புத்த பகவான் தெளிவான பார்வை

அதாவது 'சம்மா திட்டி' என மொழிந்தருளியுள்ளார்.

08. வீபேற்று நிலைகள் நான்கு வகைப்படும். அவை முறையே.

சோவான் நிலை: வீடுபேற்றின் முதலாவது நிலை. மனதிலுள்ள சக்காய திட்டி (ஆன்மா உண்டெனும் தவறான காட்சி), சீலப்பத பராமாசம்(பிழையான விரதங்கள்), மும்மணிகள் மீதான சந்தேகம் என்பனவற்றை நீக்கியவர். இப்பேற்றினை அடைந்தவர் ஒருபோதும் நால்வகை நரகங்களில் பிறக்கமாட்டார். அதேபோல் கூடியபட்சம் ஏழு பிறவிகளிலே மோட்சத்தை அடைந்து விடுவார்.

சகதாகாமீ நிலை: காம உலகங்களான மனித, தேவ, உலகங்களில் ஒருமுறை மாத்திரம் பிறந்து பிரம்மலோகத்தில் பரிணிர்வானத்தை எய்துபவர்.

அநாகாமி: மனமாசுகளில் மூன்றில் இரண்டினை முற்றாக நீக்கியவர். அதாவது ஆசை மற்றும் கோபத்தினை முழுமையாக நீக்கியவர். ஒரு பிறவியை பிரம்ம உலகத்தில் பிறந்து அங்கேயே பரிணிர்வாணம் அடையும் உத்தமர்.

அரஹத்: ஆசை, கோபம், அறியாமை எனும் மூன்று மனமாசுகளையும் முற்றாக அழித்தவர். சீவன் முத்தியடைந்தவர். பிறவாநிலையை எய்தியவர். அஞ்ஞானத்தை முற்றுமுழுதாக அழித்தவர். மனதை பரிபூரணமாக தூய்மைபடுத்திக்கொண்டு உத்தம நிலையை அடைந்தவர்.

**நமோ புத்தாய**